# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய மாத இதழ்

மலர் - 15 ஜனவரி 2002 இதழ் - 1



வெளியிடுவோர்

**கிறிஸ்துவின் சபை**

தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701.

தமிழ்நாடு, இந்தியா

© 04257-30030, 30382. E-mail: kangayamcofc@eth.net

# அருமையான வாய்ப்பு

பரிசுத்த ஆவியானவரின் பணி (170 பக்கங்கள்) மற்றும் புதிய ஏற்பாட்டு ஆராதனை (112 பக்கங்கள்) ஆகிய நூல்கள், தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும், வேத மாணவர்-களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

புத்தகம் முற்றிலும் இலவசம். ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தகங்கள் அனுப்பப்படும். அனுப்ப வேண்டிய குறைந்த பட்ச தொகை ரூ.20/-.

**தொடர்பு முகவரி**

**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
தபால் பெட்டி எண் 27,
காங்கயம் - 638 701. இந்தியா.

குறிப்பு: M.O. கூப்பனில் உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்.

# ஆசானின் அறிவுரையிலே...


| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் உரை | 1 |
| 2. | மாணவர் சேர்க்கை அறிவிப்பு | 9 |
| 3. | கிறிஸ்துவின் சபை என்றால் என்ன ? | 10 |
| 4. | பெண்கள் பகுதி | 13 |
| 5. | வாலிபர் பகுதி | 16 |
| 6. | உன்னத பாட்டு ஒரு கண்ணோட்டம் | 19 |
| 7. | சிறுவர் பகுதி | 20 |
| 8. | வெளிப்படுத்தின விசேஷம் | 22 |
| 9. | நம்பிக்கை | 28 |

THIRUMARAI AASAAN

PUBLISHED BY CHURCH OF CHRIST

Editor
S. Rajanayagam

Honorary Editor
J.C. Choate

Dharapuram Road, Kangayam - 638 701, Tamil Nadu, India

*Pleading for the restoration of pure New Testament Christianity*

Vol.15 January - 2002 Issue-1

ஆசிரியர் உரை

# யாருக்குத் தெரியும்?

சமீபகாலமாக, தலையங்கப் பகுதி கேள்வியுடனேயே வருகிறது என்று எண்ணுகிறீர்களா? ஒருவேளை, நீங்கள் அப்படி எண்ணினால், நிச்சயமாகத் தவறு உங்களுடையதல்ல. உண்மை நிலை அப்படித்தான் உள்ளது. எப்படியாகிலும் கிறிஸ்துவும், அவருடைய சபையும் அறிவிக்கப்பட்டாக வேண்டும். அது உண்மையாகவே தேவனுக்குப் பயப்படுகிறவர்களைச் சென்றடைந்தாக வேண்டுமென்று விடாப்பிடியாக விரும்புவதன் விளைவு தான் இப்படிக் கேள்வி மேல் கேள்வி வருவதற்கான காரணம். கேள்விக்காகிலும் பதில் கிடைக்காதா என்று ஏங்குவது இன்னுமொரு காரணம்.

சரி, "யாருக்குத் தெரியும்?" என்ற கேள்வி பொதுவாக எந்தச் சூழ்நிலையில் கேட்கப்படும்? முதலாவது, ஒரு விஷயம் எத்தனை பேருக்குத் தெரிந்திருக்கிறதென்பதைத் தெரிந்து கொள்வதற்காகக் இக்கேள்வி கேட்கப்படலாம்; அடுத்து, ஒரு காரியம் யாருக்குமே தெரியாது என்பதை நாசுக்காக எடுத்துரைப்பதற்கு, இப்படி கேட்கப்படக் கூடும். இப்புதிய வருடத்தின், துவக்க மாதத்தில் கேட்கப்படும் நமது, "யாருக்குத் தெரியும்?" என்ற கேள்வி, இவ்விரண்டில், இரண்டாவது வகையைச் சார்ந்தது.

இப்பொழுது, நமது தலைப்பு, இடம் பெற்றிருக்கும் நூல் எது என்றும், இக்கேள்வி எந்த சந்தர்ப்பத்தில், யாரால், யாரிடம் கேட்கப்பட்டது என்றும் தெரிந்து கொள்வோமா?

பரிசுத்த வேதாகமத்தில் அடங்கியுள்ள 66 நூல்களுள், தனித்துவம் வாய்ந்தது என்று கருதப்படும் தகுதி எஸ்தர் சரித்திர நூலுக்கு உண்டு. ஆம், பத்து அதிகாரங்களைக் கொண்ட இப்பழைய ஏற்பாட்டு நூலில், தேவன், கர்த்தர் போன்ற வார்த்தைகள் ஒரிடத்தில் கூட இல்லை. இத்தனைக்கும், தேவனுடைய, முழுமையான பாதுகாப்பு அவருடைய பிள்ளைகள் மீது உண்டென்பதையும்,

அவரின் தெய்வீக வழிநடத்துதல், அவருடைய பிள்ளைகளுக்கு கிடைக்கிறதென்பதையும் தெள்ளத் தெளிவாக வெளிப்படுத்தும் நூல் இது. தேவனுடைய பெயர்தான், இந்நூலில் இல்லையேயொழிய, அவருடைய தாங்கி வழி நடத்தும் கரம் இதில் இல்லாமல் போகவில்லை. சாலமோனின் உன்னதப்பாட்டு நூலிலும், தேவன், கர்த்தர் போன்ற வார்த்தைகள் இல்லையென்று நாம் சொன்னாலும், இவ்விரண்டும் அடிப்படையிலே வெகு வேறுபாடு கொண்டவை.

இந்நூல், நமதாண்டவராகிய இயேசுக் கிறிஸ்து பிறப்பதற்கு, சுமார் 480 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டுள்ளது. அன்றைய உலகின், பாதிக்கு மேற்பட்ட நிலப்பரப்பை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த சாம்ராஜ்யம் பெர்சியா. இந்நூலின் காலத்தில் பெர்சியாவின் ஏக சக்கரவர்த்தியாக இருந்தவன் ராஜாவாகிய அகாஸ்வேரு. இந்தியா முதல் எத்தியோப்பியா வரையிலான 127 நாடுகளுக்கும் அவன் சக்கரவர்த்தியாக இருந்துள்ளான். இவன் காலத்தில் தான், நமது கேள்விக்கான சம்பவம் நடத்துள்ளது. இது நடந்த இடமாகக் கருதப்படுவது, அவனுக்கு சொந்தமான அரண்மனைகளுள் ஒன்றான சூசான் அரண்மனை. இது, பெர்சிய மா மான்னர்களின் மாரிக்கால வாசஸ்தலம். இவ்வரண்மனை பாபிலோனுக்கு கிழக்கே சுமார் 350 கி.மீ. தொலைவில் இருந்துள்ளது.

ராஜாவாகிய அகாஸ்வேரு, தன்னுடைய ராஜ்யபாரத்தின் மூன்றாம் வருஷத்தில், தனது பரந்த எல்லைக்குட்பட்ட எல்லா தேசங்களின் அதிபதிகளையும், பிரபுக்களையும், வரவழைத்து தன் ராஜ்யபாரத்தின் மகிமையையும், ஐசுவரியத்தையும், பிரதாபத்தையும் நூற்றெண்பது நாளளவும் விளங்கச் செய்து கொண்டிருந்தான். அக்கோலாகலக் கொண்டாட்டம் முடிகிறபோது, தன் அரண்மனையை ஒட்டிய சிங்காரத் தோட்டத்தில் ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்தான். அவ்விருந்தில் பரிமாறுவதற்கும், பருகுவதற்கும், சாப்பிடுவதற்கும் பயன்படுத்தப்பட்ட பாத்திரங்கள் பொன்னால் செய்யப்பட்டவைகளாம். அப்படியானால், அவ்விருந்தின் தன்மையை நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள்!

இப்படி, தன் மகிமைப் பிரதாபத்தின் மூலமும், கோலாகலக் கொண்டாட்டத்தின் மூலமும், எண்ணிப் பார்க்கவே முடியாத விருந்தின் மூலமும் தனக்குக் கிடைத்த பேரும், புகழும், பெருமையும் போதாதென்று, தன் பேருக்கும், புகழுக்கும், பெருமைக்கும் மேலும் மெருகேற்றும்படியாய், மகா ரூபவதியாயிருந்த பட்டத்து ராணியாகிய வஸ்தியை, ராஜ வஸ்திரம் தரித்தவளாக, அவைக்கு முன் வரக் கட்டளையிட்டான். ஆனால், ராஜாத்தியாகிய வஸ்தி, தனக்குச் சொல்லியனுப்பப்பட்டதின்படி செய்யாமல் போனபடியால், அதிரடியாய் அந்த ஸ்தானத்திலிருந்து அகற்றப்பட்டாள்.

அதன்பின்பு சிறிதுகால இடைவெளிக்குப் பிறகு, காலியாக இருந்த பட்டத்து ராணியின் இடத்திற்கு, ரூபவதியாயிருக்கிற கன்னிப்பெண்களைத் தேடும் படலம் ஆரம்பமாயிற்று. இதை எப்படியோ அறிந்து கொண்ட ஞானமும், சமயோசித புத்தியும் அத்தோடு தேவ பக்தியும், தேசப்பற்றும் கொண்ட மொர்தெகாய் செயலில் இறங்கினான். இந்த மொர்தெகாய், பாபிலோன்

ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரால் சிறைப்பிடித்துப் போகப்பட்டவர்களில் ஒருவன். இவன், தாயும், தகப்பனும் இல்லாத, தன் சிறிய தகப்பனுடைய மகளை, தன் மகளாக வளர்த்து வந்தான். அவள் ரூபவதியும், சௌந்திரியமுள்ளவளாயும் இருந்தாள். இவளை தேசமெங்கும் தேடிக்கண்டுபிடிக்கப்பட்ட ரூபவதிகளில் ஒருத்தியாக இருக்கும்படியான வேலையை சாமர்த்தியமாகச் செய்து முடித்தான். தான், ஒரு அடிமைப் பெண் என்பதை எஸ்தர் சொல்லக் கூடாதென்று அவன் அர்த்தத்தோடு அறிவுறுத்தியுமிருந்தான் (2;10). ஆயத்த வேலைகள் அனைத்தும் முடிந்து, பட்டத்து ராணியைத் தேர்ந்தெடுக்கும் சமயமும், எஸ்தர் உள்ளே பிரவேசிப்பதற்கான முறையும் வந்தபோது, எல்லார் கண்களிலும் தயை பெற்றுக்கொண்ட எஸ்தருக்கு, இறுதியில் **ராஜாவின் அன்பும்** கிடைத்தது. அவ்வளவு தான். அடிமைப்பெண்ணாகிய எஸ்தர், குப்பையிலே கிடந்த குண்டுமணியான எஸ்தர் பட்டத்து இளவரசியானாள். ஆனாளா? அல்லது ஆக்கப்பட்டாளா? ஆக்கப்பட்டாள். அப்படியானால், யாரால்? மொர்தெகாயால், மொர்தெகாயால் மாத்திரமா? நீங்கள் அப்படியா நினைக்கிறீர்கள்? நீங்கள், அப்படி நினைக்கமாட்டீர்களென்று நான் நிச்சயமாக நம்புகிறேன். அப்படியானால், யாரால்தான்? கண்டிப்பாக சர்வவல்லவரால் தான். சந்தேகம் வேண்டவே வேண்டாம்.

தேவனுடைய, தாங்கி வழிநடத்தும் கரம் இங்கே இப்படியாக இருந்தபடியால் பிசாசும் தன் பங்குக்குக் காரியமாற்ற முழுவீச்சில் இறங்குகிறான். தேவனுடைய திட்டத்தைத் தவிடுபொடியாக்க வேண்டுமென்ற சதியோடு, தனது கைக்கூலியாகச் செயல்படுத்துவதற்கு சகல தகுதிகளையும் பெற்ற ஆமான் என்னும் மனிதனைக் கண்டு பிடிக்கிறான். ஆம், முன் பின் தெரியாத ஆமான், இப்பொழுது ராஜாவுக்கு அடுத்த ஸ்தானத்துக்கு வந்து சேருகிறான். அப்படித்தான், இவன் ஒரு நல்லவனா என்று பார்த்தால், வசனம் இவனை "மூர்க்கம் நிறைந்தவன்" என்று கூறுகிறது. அப்படியானால், இவன் தேவனுடைய மனிதனாக இருக்க வாய்ப்பில்லைதானே.

இந்த ஆமானை, ராஜாவின் ஊழியக்காரர் அனைவரும் வணங்கி, நமஸ்கரித்தார்கள். பக்தியுள்ள யூதனாகிய நம் மொர்தெகாய் மாத்திரம் விதி விலக்காக விலகி நின்றான். அதிகார போதை தலைக்கேறியதால் ஆட்டம் போட்டுக் கொண்டிருந்த ஆமானால், இந்த பக்தியுள்ள யூதனின் செயலைப் பொறுக்க முடியவில்லை. ஆத்திரம் பொங்குகிறது. கோபம் கொப்பளிக்கிறது. ஆனால், சாமானியனான இந்த மொர்தெகாயின் மீது மாத்திரம் கை போடுவது, அவனுக்கு அற்பகாரியமாகத் தெரிகிறது. ஆகையால் ஒட்டு மொத்த யூதரையும் சங்கரிக்க வகை தேடுகிறான். வஞ்சக எண்ணம் கொண்ட இந்த ஆமான், தன் சதியை நிறைவேற்றுவதற்கு வெகு சாமர்த்தியமாகக் காய் நகர்த்தினான். இவனின் தந்திர வார்த்தைகளுக்கு தலை வணங்கிய ராஜாவாகிய அகாஸ்வேரு, "உன் இஷ்டப்படி செய்யலாம்" என்று (3;10) வாய்மொழி உத்தரவு கொடுத்ததோடல்லாமல், அது இராஜாவின் பேரால் எழுதப்பட்டு, ராஜாவின் மோதிரத்தினால் முத்திரையும் போடப்பட்டது. (3;12). இவ்விதம் தனக்கு ஏகபோகமாய்க் கொடுக்கப்பட்ட எக்கச்சக்கமான உரிமையை தன் வஞ்சகத்தை நிறைவேற்றக் கிடைத்த தக்க தருணம் எனக் கருதி, யூத இனம் முழுவதையும்

பூண்டோடு ஒழிக்க ஏற்பாடு செய்துவிட்டான். ஆம், மர்தமும், தேதியும் குறிக்கப்பட்டு, சகல தேசத்திற்கும் செய்தியும் போய்ச் சேர்ந்தது. (எஸ்தர் 3:13-15)

இப்படி, தேவ ஜனமாகிய தன் இனத்திற்கு நேரப் போவதை அறிந்த மொர்தெகாய், தன் வஸ்திரங்களைக் கிழித்து, இரட்டுடுத்தி, சாம்பல் போட்டுக் கொண்டு, நகரத்தின் நடுவே புறப்பட்டுப் போய், துயரமுள்ள மகா சத்தத்துடனே அலறிக் கொண்டு, ராஜாவின் அரமனை வாசல் முகப்பு மட்டும் வந்தான். ஆனால், அங்கே தானே, அவன் தடுத்து நிறுத்தப்படுகிறான். அதற்குமேல் சொல்ல அவனுக்கு அனுமதி இல்லை. எப்படியோ இச்செய்தி, தாதிமார்கள் மூலமும், பிரதானிகள் மூலமும் ராஜாத்தியாக எஸ்தருக்கு எட்டிற்று. ஆனால், அவளுக்கு விஷயம் விளங்கவில்லை. காரியம் என்ன? முகாந்திரம் என்ன என்று விசாரித்து வரச் சொல்லுகிறாள். அப்பொழுது தான் விபரம் தெரிகிறது. விபரம் வந்த கையோடு தன் வளர்ப்புத் தந்தையாகிய மொர்தெகாயிடமிருந்து **உடனடியாகச் செயல்படு** என்று நிர்பந்தமும் வருகிறது. ஒரு பக்கம், தனது தந்தையிடமிருந்து நிர்பந்தம். மறுபக்கம், ராஜா அழைக்காமல் யாரும் உள்ளே செல்லக் கூடாது என்ற மாறாப்பிரமாணம். எஸ்தரின் நிலை, இப்பொழுது, "இருதலைக் கொள்ளி எறும்பு" போலானது. செயல்படமுடியாமல் தவிக்கிறாள். தன் நிலையை மொர்தெகாய்க்குத் தெரிவிக்கிறாள். மொர்தெகாய் எஸ்தரின் பதிலை ஏற்க மறுக்கிறான். மீண்டும், எச்சரித்துச் செய்தி அனுப்புகிறான். இதோ அந்த எச்சரிப்பின் வார்த்தைகள். **"நீ ராஜாவின் அரண்மனையிலிருக்கிறதினால், மற்ற யூதர்கள் தப்பக் கூடாதிருக்க, நீ தப்புவாயென்று உன் மனதிலே நினைவு கொள்ளாதே". நீ இந்தக் காலத்தில் மவுனமாயிருந்தால், யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும். அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள். நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும் என்று சொல்லச் சொன்னான்.** (எஸ்தர். 4;13,14).

தான் ஆசையோடு வளர்த்த எஸ்தருக்கு, மொர்தெகாய் சொல்லியனுப்பின, "யாருக்குத் தெரியும்?" என்ற பதில், நமக்கு மூன்று உண்மைகளை வெளிப்படுத்துகிறது. 1. உனக்குக் கிடைத்திருக்கும் "ராஜமேன்மை" உன் தகுதியினாலே உனக்கு கொடுக்கப்படவில்லையென்பது. 2. நீ அரமனை வாசியாயிருக்கும்படி, அதாவது சுகபோகமாய் வாழும்படி மாத்திரம் இந்த "ராஜமேன்மை" உனக்குக் கொடுக்கப்படவில்லையென்பது. 3. உனக்குக் கிடைத்திருக்கும் "ராஜமேன்மைக்கு" ஒரு மேலான நோக்கம், ஓர் உன்னத நோக்கம் இருக்கக் கூடும், அது "யாருக்குத் தெரியும்" என்பது.

அருமையானவர்களே, மொர்தெகாயின் பதிலை, ஒரு புதிய ஆண்டைக் கண்டிருக்கிற நம்முடைய வாழ்க்கையோடு அப்படியே ஒப்பிட்டுப் பார்ப்போம். மொர்தெகாய், எஸ்தருக்கு சொல்லியனுப்பியது போல் நம்முடைய தகுதியினால் இப்புதிய ஆண்டை நாம் பெற்றுக்கொள்ளவில்லை. நம்முடைய பலமும், பராக்கிரமும் நம்மை இப்புதிய ஆண்டுக்குள் அழைத்து வரவில்லை. நம்முடைய அறிவும், புத்தியும் இதற்கு உதவி செய்யவில்லை. நம்முடைய நீதியும், பரிசுத்தமும் இதற்குத் துணை நிற்கவில்லை. எல்லாம் அவருடைய

கிருபை. ஆம், புலம்பல் தீர்க்கன் சொல்வது போல், "நாம் நிர்மூலாமாகாதிருக்கிறது அவருடைய கிருபை". (புலம்பல் 3;22). புதிய வருடத்தைக் கண்டிருக்கிற நாம் இந்த உண்மையை முதலாவது தெரிந்து கொள்ளவேண்டும்.

அடுத்து, மொர்தெகாய், எஸ்தரே, நீ அரமனைவாசியாயிருந்து சுகபோகமாய் வாழ்வதற்கு இந்த மேன்மை உனக்குக் கொடுக்கப்படவில்லையென்பது போல், தேவன் கூட்டிக் கொடுத்த இப்புதிய ஆண்டு, நாம் உல்லாசமாய் வாழ்ந்து, உலக இன்பங்களை அனுபவிப்பதற்காகக் கொடுக்கப்படவில்லை. சுகபோகமாய் வாழ்கிறவர்கள் உயிரோடு செத்தவர்கள் என்று வசனம் கூறுகிறது. (I தீமோ. 5;6).

மூன்றாவதாக, மொர்தெகாய், உனக்குக் கிடைத்திருக்கும் ராஜமேன்மைக்கு ஓர் உன்னத நோக்கம் இருக்க வேண்டுமென்று எஸ்தருக்குச் சொன்னது போல், நமக்குக் கிடைத்திருக்கும் புதிய ஆண்டுக்கும் ஓர் உன்னத நோக்கம் இருக்கக்கூடும். அது யாருக்குத் தெரியும்? அந்த உன்னத நோக்கத்தை நாம் நிறைவேற்ற வேண்டுமென்று உன்னதமானவர் நம்மிடத்தில் எதிர்பார்க்கக்கூடும். யாருக்குத் தெரியும்.

பழம் பெரும் பக்தன் யோபு சொல்லும்போது, "சர்வ வல்லவருக்குக் காலங்கள் மறைக்கப்படாதிருக்க அவரை அறிந்தவர்கள் அவர் நியமித்த நாட்களை அறியாதிருக்கிறதென்ன? என்று கூறுகிறான். (யோபு. 24;1). அதாவது, காலங்களை அவர் நியமிக்கிறார் என்றும், அவரை அறிந்தவர்கள் அதை அறிந்து கொள்ளவேண்டுமென்றும் சொல்லுகிறார். மேலும், சங்கீதக்காரர்களில் ஒருவனான ஆசாப், "வருஷங்கள் உன்னதமானவருடைய வலது கரத்திலிருக்கிறது" என்று சொல்லுகிறான். (சங். 77;10). இந்த வசனங்களிலிருந்து நமக்குப் பளிச்செனத் தெரியும் உண்மையாதெனில், தேவன் நமக்கு இந்தப் புதிய ஆண்டைத் தந்திருக்கிறார். "அவரை அறிந்திருக்கிற நாம், அதை அறியாமலிருந்து விடக் கூடாது" என்பது.

அப்படியானால், தேவன் நமக்கு இந்த ஆண்டை எதற்காகக் கூட்டிக் கொடுத்திருப்பார்? அது யாருக்குத் தெரியும்? மொர்தெகாய் கூட, எஸ்தரிடம் இதற்காகத் தான் இந்த மேன்மை உனக்குக் கிடைத்திருக்கிறதென்று சொல்லவில்லை. மாறாக, "இதற்காக இருக்கலாமே" என்று தான் கூறுகிறார். அதே போன்று, இந்தப் புதிய ஆண்டும், இதற்காகத் தான் நமக்குக் கிடைத்திருக்கிறதென்று நானும் அறுதியிட்டுச் சொல்ல முடியாது. ஆனால், அது இதற்காக இருக்கலாமே, யாருக்குத் தெரியுமென்று நாம் அநேகக் காரியங்களைக் கூறமுடிந்தாலும், அவையெல்லாவற்றையும் இங்கே பார்க்க முடியாதாகையால், அவசியமான இரண்டை மாத்திரம் இப்பொழுது பார்ப்போம்.

## I நீங்கள் உண்மையான உபதேசத்தை அறிந்து கொள்ளும்படியாய் இருக்கலாம்

நம்முடைய தலைப்பின் கீழாக, நம்மால் கற்றக்கொள்ள முடிகின்ற முதல் பாடம், நாம் உண்மையான உபதேசத்தை அறிந்து கொள்ளும்படியாய் காலங்களைத் தன் கையிலே வைத்திருக்கிற தேவன், இப்புதிய ஆண்டை நமக்கு கூட்டிக் கொடுத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும்? என்பது.

ஒருவேளை, நீங்கள் நினைக்கலாம், சொல்லுவதற்கு எத்தனையோ காரியங்கள் இருக்கும்போது, உபதேசம் பற்றி நான் உபதேசம் பண்ணுகிறேனே என்று உபதேசம் அவ்வளவு முக்கியமானதா என்று கூட நீங்கள் எண்ணலாம்! ஆனால், தேவனுடைய உபதேசம், அவரை உண்மையாய்ப் பின்பற்றுகிறவர்களுக்கு மிகவும் முக்கியமானதுதான். சந்தேகமில்லை.

நம்முடைய இரட்சகராகிய இயேசுக் கிறிஸ்து, தன்னுடைய நாட்களில், தேவனால் கொடுக்கப்பட்ட மோசேயின் பிரமாணத்தைக் கைக்கொள்ளாமல், மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்த பரிசேயர்களையும், வேதபாரகர்களையும் கடிந்து கொண்டார். அத்தோடு அந்த உபதேசங்களைப் பின்பற்றுவது வீண் என்றும் எடுத்துரைத்தனர். (மத். 15;9). மேலும், பவுலடியார் கொரிந்தியருக்குச் சொல்லும் போது, "நான் உங்களுக்குப் பிரசங்கித்தபிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றபடி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே" என்கிறார் (1. கொரி.15;2). இந்த வசனங்கள், நமது பக்திக்குண்டான வாழ்வுக்கு, உபதேசமும், பிரசங்கமும் எவ்வளவு அவசியமானதென்பதைக் காட்டுகிறது.

கிறிஸ்துவானவர் இப்பூமியை விட்டுச் செல்வதற்கு முன்பாகக் கொடுத்த பிரதான கட்டளையில், உபதேசத்திற்கு மிக முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார். உலகமெங்கும்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள் என்று சொன்னவர் அத்தோடு நிற்காமல், "**நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்**" என்றார். (மத்.28;19,20). ஆம், இயேசு போதித்த யாவற்றையும், இயேசுவானவர் அனுப்பின தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தின எல்லாவற்றையும், இயேசுவைப் பின்பற்ற விரும்புகிறவர்கள் கடைபிடிக்க வேண்டியது அவசியம். இயேசுவானவர், தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்திலே நிலைத்திருந்தால், மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள் என்று கூறுகிறார். (யோவான்.8;31). அப்படியானால், **உபதேசத்திலே** நிலைத்திராவிட்டால், அவருடைய உண்மையான சீஷனாயிருக்க முடியாது. இதுதானே, அதன் பொருள். உபதேசம் முக்கியம் என்பதை, இயேசுவைவிட யார் சொல்லவேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்கள்?

அப்படியானால், நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில், நாம் செய்கின்ற அனைத்தும் உபதேசத்தின்படியாக இருக்கிறதா என்பதை நாம் உறுதி செய்து கொள்ளவேண்டும். இயேசுவின் நாட்களில், மனுஷருடைய கற்பனைகள் உபதேசங்களாக இருந்தது, இன்றைக்கும் அப்படியே உள்ளது. (மத்.15;2) பவுலின் நாட்களில் வேற்றுமையான உபதேசம் இருந்தது. (கலா. 1;6, 1. தீமோ. 1;3). அது இன்றைக்கும் இருக்கிறது. பேதுருவின் நாட்களில் கள்ளப் போதகர்கள் இருந்தார்கள். (II பேது 2:1) கடைசி அப்போஸ்தலனான யோவானின் நாட்களிலும் கள்ள தீர்க்கதரிசிகள் இருந்தார்கள். இன்றைக்கும் இருக்கிறார்கள். கள்ள ஆவிகளும் இருந்தது. (1. யோவான். 4;1). அது அப்படியே நம்முடைய நாட்களிலும் இருக்கிறது. ஆகையால், நாம் அவைகளைச் சோதித்துப் பார்த்து மெய்யானதைக் கடைப்பிடிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். (1 யோவான் 4:1 1.தெச.5:21).

ஆகையால், அருமையானவர்களே, இப்புதிய ஆண்டிலேயே இயேசுவின் மெய்யான சீஷனாயிருப்பதற்கு, அவரின் உண்மையான உபதேசத்தைப் பின்பற்றத் தீர்மானிப்போம். அதற்காக, இந்த ஆண்டு நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கலாமே, எது யாருக்குத் தெரியும்?

## II. நீங்கள் உண்மையாய் இரட்சிக்கப்படும்படியாய் இருக்கலாம்.

நம்முடைய தலைப்பு நமக்குக் கற்றுத் தருகின்ற, அடுத்த பாடம், இப்புதிய ஆண்டு நாம் உண்மையாய் இரட்சிக்கப்படும்படியாய் இருக்கலாம், அது யாருக்குத் தெரியும்? என்பது.

உலகத்தில் பிறந்த எல்லா மனிதர்களும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது (1.தீமோ.2:4) படைத்தவரின் சித்தம் இதுவாக இருந்தாலும், படைப்பாகிய மனிதன் இது பற்றி கிஞ்சித்தும் அக்கறை கொள்வதில்லை. தான், இரட்சிக்கப்படவேண்டுமென்ற உணர்வில்லாத ஒரு வாழ்க்கையைத் துணிகரமாய் நடத்திக் கொண்டிருக்கிறான். ஆனால், ஒன்று நிச்சயம். சரீரத்தில் அவனவன் செய்கின்ற காரியங்களுக்கான பலன் ஒருநாளில் வெளிப்பட்டே ஆகும். (2.கொரி.5:10) அப்பொழுது யாரும் தப்பவே முடியாது.

தொட்டில் முதல் சுடுகாடு வரையிலான வாழ்க்கையில், மனிதன் எண்ணிலடங்காத கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறான். ஆனால், கேட்க வேண்டிய ஒரு கேள்வியாகிய, அவனுடைய நித்தியத்தைத் தீர்மானிக்கக் கூடிய கேள்வியாகிய, "**இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?**" என்ற கேள்வியை மாத்திரம் ஏனோ கேட்கத் தவறி விடுகிறான். ஆனால், இந்தக் கேள்வியை ஒவ்வொருவரும் கேட்டு அதற்குச் சரியான பதிலைப் பெற்று, அதற்கு உண்மையாய்க் கீழ்ப்படிவார்களானால், அவன் வாழ்வு இம்மையிலும், மறுமையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்.

இக்கேள்வியை இப்பூமியின் வாழ்வில் கேட்கின்ற வெகு சிலரும், இக்கேள்விக்கான பதிலை உண்மையாய்ப் பெற்று, அதற்கு முழுமையாகக் கீழ்ப்படிவதில்லை. இரட்சிப்புக்கான வழி இதுதான் என்று ஆளாளுக்கு ஒவ்வொருவிதமாய் போதித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒளியின் மூலமாக இரட்சிக்கப்பட்டேன், சத்தத்தின் மூலமாக இரட்சிக்கப்பட்டேன் என்று கூறுகிற மேதாவிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்களை மேதாவிகள் என்பதா அல்லது அப்பாவிகள் என்பதா தெரியவில்லை. ஒருவேளை, ஒருவன் ஒளியின் மூலமும், சத்தத்தின் மூலமும் இரட்சிக்கப்படுவது உண்மையானால், அப்போஸ்தலன் பவுலை, தமஸ்குவின் நெடுஞ்சாலையில் இயேசுவானவர் ஒளியின் மூலமும், சத்தத்தின் மூலம் சந்தித்தபோது, அவன் ஏன் இரட்சிக்கப்படவில்லை? சொல்லுங்கள். "நீ எழுந்து, தமஸ்குவுக்குப் போ; நீ செய்யும்படி நியமிக்கப்பட்டதெல்லாம் அங்கே உனக்குச் சொல்லப்படும்" (அப்போதஸ்தலர். 22:10) என்று ஏன் பவுலுக்கு சொல்லப்பட்டது? மாத்திரமல்ல, அங்கு, "நீ எழுந்து, கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" (அப்.22:16) என்று ஏன் போதிக்கப்பட்டது? சிந்திப்போம்.

இரட்சிப்பு தேவன் சம்பந்தப்பட்டது. தேவன் சம்பந்தப்பட்ட யாவும் கிரமமாகவும், நல்லொழுக்கமாகவும் செய்யப்பட வேண்டும் (1.கொரி.14:40).

இரட்சிப்பு நம்முடைய நித்தியம் சம்பந்தப்பட்டது. நித்தியம் சம்பந்தப்பட்ட யாவும் பயத்தோடும், பக்தியோடும் செய்யப்பட வேண்டும். (பிலி. 2:12) அப்படியானால், நம்முடைய ஆத்தும இரட்சிப்பும் அதற்கான முயற்சியும் இந்தளவில் இருக்கிறதா? சொல்லுங்கள். "நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை" (அப் 4:12). "நாமம்" என்றால் "அதிகாரம்" இரட்சிக்கப்படுவதற்கான அதிகாரத்தை தமது வசனத்தின் மூலமாகக் கொடுத்துள்ளார். நாம் உண்மையில் இரட்சிப்படைய வேண்டுமானால், அந்த இரட்சிப்பு வசனங்களின் போதனையின்படியாக இருக்க வேண்டும்.

இரட்சிப்படைவதற்கான வசனங்களின் போதனை இதோ. 1. தேவனை விசுவாசிக்க வேண்டும். (எபி.11:6 அப்.89:37). 2. பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும். (2. பேதுரு.3:9) அப்.2:38) 3. இயேசு தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட வேண்டும் (ரோமர்.10:9, 10அப்8:37), 4. பாவமன்னிப்புக்காய் ஞானஸ்நானம் பெற வேண்டும். (மாற்கு.16:16 அப்.22:16). இதன்படி நாம் செய்தால், நாம் இயேசுவின் நாமத்தினாலே உண்மையாய் இரட்சிக்கப்பட்டவர்களாவோம்.

அருமையானவர்களே, இப்புதிய ஆண்டை, தேவன் எதற்காக நமக்குக் கூட்டித் தந்திருக்கிறார் என்று தெரியாது. ஆனால், உண்மையான உபதேசமும், உண்மையான இரட்சிப்பும், இருக்க வேண்டிய அளவுக்கு இல்லாத இந்தக் காலத்தில், நீ உண்மையான உபதேசத்தையும், அதனடிப்படையில் உண்மையான இரட்சிப்பையும் பெற்றுக்கொள்ளும்படியாய் இருக்கலாமே, யாருக்குத் தெரியும். உன்னையும், என்னையும் தேவன் இந்தளவு நேசித்திருக்கும்போது, நாம் ஏன் அவர் சித்தம் செய்ய நம்மை ஒப்புக் கொடுக்கக் கூடாது?

மொர்தெகாய், உனக்கு கிடைத்திருக்கும் “ராஜமேன்மை”, இதற்காக இருக்கலாமே என்று சொன்ன மாத்திரத்தில், அவள் உடனடியாக செயல்பட்டதை உங்களுக்கு நினைவு படுத்துகிறேன். ஆம், அவளது உயிருக்கே அங்கு ஆபத்து நேரிடலாம் என்ற சூழ்நிலை இருந்தும் அதைப்பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாமல், கொலு மண்டபத்தில் ராஜாவை சந்தித்தாள். தான் செய்ய வேண்டியதைக் குறைவில்லாமல் செய்தாள். அதன்மூலம் தன்னையும் தன் குலத்தையும் இரட்சித்துக் கொண்டாள். எஸ்தருக்கு “ராஜமேன்மை” கிடைத்தது போல, தேவன் நமக்குப் “புதிய ஆண்டை” தந்திருக்கிறார். எஸ்தருக்குச் சொல்லப்பட்டதுபோல, இப்புதிய ஆண்டு, இதற்காக இருக்கலாமே என்று நமக்கும் சொல்லப்பட்டது. நாம் என்ன செய்யப் போகிறோம்? நாமும் அந்த எஸ்தரைப் போலவே விரைந்து செயல்பட்டு, உண்மையான உபதேசத்தினடிப்படையில், நம்மையும், நம்மோடிருப்பவர்களையும் உண்மையான இரட்சிப்புக்குள் வழி நடத்துவோம். கிறிஸ்துவின் உபதேசத்தில் நாம் இரட்சிப்படைந்திருந்தால், அதிலே உறுதியாய் நிலைத்திருப்போம். நாம் அப்படிச் செய்யப் பரலோகத்தின் தேவன் இரக்கங் கட்டளையிடுவாராக ! ஆமென்!

***S. ராஜநாயகம்***

# உலக
# வீடியோ வேதாகமக் கல்லூரி
## மாணவர் சேர்க்கை அறிவிப்பு

வேதாகம முழுநேரப் பயிற்சிக்கு தங்களை அர்ப்பணிக்க வாஞ்சையுள்ள வாலிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| காலம் | : | 3 வருடம் (செமஸ்டர் முறை) |
| கல்வித் தகுதி | : | +2 தேர்ச்சி (அல்லது) பட்டப்படிப்பு (திருமணமாகாத ஆண்கள் மட்டும்) |
| பட்டம் | : | B.B.S. (Bachelor of Biblical Studies) |
| தனித்தன்மை | : | இந்தியாவின் ஒரே வீடியோ வேதாகமக் கல்லூரி |
| ஆசிரியர்கள் | : | உலகெங்கிலும் பெயர் பெற்ற, தேவனுக்கென்று தங்களை அர்ப்பணித்த தேவதாசர்கள் (அமெரிக்கா) |
| போதிக்கும் முறை | : | வீடியோ மூலம் மொழி பெயர்ப்புடன் போதிக்கப்படுகிறது. |

**தகுதியுள்ளவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படும்.**

மேலும் விபரங்கட்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

இயக்குநர்
**உலக வீடியோ வேதாகமக் கல்லூரி**
தாராபுரம் ரோடு,
காங்கயம் - 638 701.
இந்தியா
தொலைபேசி : (04257) 30030

# கிறிஸ்துவின் சபை என்றால் என்ன?

இன்று உலகில் ஏராளமான சபைகள் உள்ளன. அநேக வழிகளில், அவைகள் அனைத்தும் ஒன்றாக காட்சி தருகின்றன. அவைகள் மனிதர்களால் ஸ்தாபிக்கப்பட்டவைகள். அவைகள் அவ்வளவு முக்கியமானவைகளல்ல, ஏனெனில், அவைகளின் அங்கத்தினர்களே அவைகளில் அங்கம் வகிக்காமலேயே பரலோகம் செல்ல முடியும் என்று கூறுகின்றனர். பலவிதமான பெயர்கள் அவைகளுக்கு தரிக்கப்பட்டு, மதப்பட்டயங்களையும், தனிப்பட்ட கொள்கை அல்லது உபதேச புத்தகங்களையும் கைக் கொள்கின்றனர். ஆனால் இந்தக் கூட்டங்களைச் சாராத ஒரு சபை உண்டு. அது அவைகள் எல்லாவற்றிலிருந்தும் வித்தியாசப்பட்டது. அதுதான் கிறிஸ்துவின் சபை.

கிறிஸ்துவின் சபை ஒரு நாமகரணக் கூட்டமல்ல. அது எந்த பிரிவோடும் சம்மதம் கொள்ளும் கூட்டமுமல்ல. அது கத்தோலிக்கமோ, புராட்டஸ்டண்டோ, அல்லது யூத பிரிவோ அல்ல. அது ஒரு பிரிவுக் கூட்டமல்ல. அது மனிதனிடத்திலிருந்து துவக்கம் பெறவில்லை. அது மனிதனை தலையாகக் கொண்டிருப்பதில்லை. பூமிக்குரிய தலைமையகம் அதற்கு இல்லை. அது மனிதப் பெயர்களை தரித்துக் கொள்வதில்லை. மனிதனுடைய கொள்கைப் புத்தகங்களை அது பின்பற்றுவதில்லை. அது அரசியல் அல்லது சமுதாய இயல்பைப் பெற்றதல்ல. அப்படியானால் அது என்ன? அது என்னவாக இருக்கக்கூடும்? பார்ப்போம்.

சபை என்ற பதம் "எக்லீசியா" என்னும் கிரேக்க வார்த்தையிலிருந்து வருகிறது, அதன் பொருள் "அழைக்கப்பட்டவர்கள்", மற்றொரு வார்த்தையில் சொன்னால், உலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு, கர்த்தருடைய ஊழியத்திற்கு அழைக்கப்பட்டவர்களின் கூட்டத்தை தன்னகத்தே கொண்டதே சபை. இப்படிப்பட்ட மாற்றத்தைக் குறித்து பவுல் பேசுகிறார். உலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு தேவனுடைய ராஜ்யத்திற்குள் அல்லது கர்த்தருடைய சபைக்குள்ளாக்கப்பட்டதாக பேசுகிறார். (கொலோசேயர் 1:13, 14).

வேதம் சபையை இரு பொருளில் பேசுகிறது. முதலாவதாக அது உலகளாவிய சபை என்ற ரீதியில் பேசுகிறது. கிறிஸ்து இதனை மனதில் கொண்டுதான் "........ என் சபையைக் கட்டுவேன்" என்று சொன்னார் (மத்தேயு 16:18). இதில், கிறிஸ்து சபையை ஒரு பொதுவான ஸ்தாபித கண்ணோட்டத்தில், அதாவது அதை அந்தந்த ஊர்களில் அமைவு பெறுகிற பிராந்திய சபையாக எண்ணாமல், பேசுகிறார். இரண்டாவதாக சபை, தனித்தனி ஊர்களில் அமைந்த பிராந்திய சபையாக பேசப்பட்டுள்ளது. கொரிந்துவிலிருந்த சபை, தெசலோனிக்கேயில் இருந்த சபை போன்ற பொருளில் மீண்டும் மீண்டும் பல இடங்களில் பேசப்பட்டு வருகிறது. (1கொரிந்தியர் 1:2; 1 தெசலோனிக்கேயர் 1: 1). பிறகு அனைத்து பிராந்திய சபைகளையும் மனதில் கொண்டு, பவுல், "கிறிஸ்துவின் சபையார் (சபைகள்) உங்களை வாழ்த்துகிறார்கள்" என்றார் (ரோமர் 16 : 16). ஆசியாவிலுள்ள ஏழு சபைகள் என்று வெளிப்படுத்தின விசேஷத்தில் நாம் வாசிப்பதும் இந்தக் கண்ணோட்டத்தில் பேசப்படுவதுதான்.

சபை இப்பூமியில் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாயிருக்கிறது. அது அவருக்கு கீழ்ப்படிந்து அவரை சேவிக்கிறவர்களைக் கொண்டு அமைவு பெற்றது. இந்த சரீரத்திற்கு அநேக அங்கங்கள் இருந்தாலும், ஒரே ஒரு தலை மாத்திரமே உண்டு (1

கொரிந்தியர் 12 ; கொலோசேயர் 1:18). ஒரே ஒரு சரீரம் மட்டுமே உண்டு (எபேசியர் 4:4), அதுவே சபை (எபேசியர் 1:11-23).

மனிதர்களால் உண்டுபண்ணப்பட்ட சபைகளின் தோற்றம் மற்றும் வரலாற்றைக் காண, அவர்களின் வரலாற்றுப் புத்தகங்கள் மற்றும் பிற (இலக்கிய) புத்தகங்களைப் படித்து நீங்கள் தகவல்களைச் சேகரிக்க வேண்டும். அந்த சபைகளைக் குறித்து நீங்கள் வேதாகமத்திலிருந்து அறிய இயலாது, ஏனெனில் அது கர்த்தரிடத்தில் ஆரம்பிக்கப்பட்டதல்ல, மறுபடியும் பார்த்தால், கிறிஸ்துவின் சபையைக் குறித்து நீங்கள் அறிய விரும்பினால், அதற்குச் சரியான இடம் வேதாகமம் மட்டுமே. வேதாகமம் சபை வரலாற்றையும் அதைக்குறித்து நீங்கள் அறிய வேண்டிய அனைத்தையும் கூறுவதோடு, சபையின் வழிகாட்டியாகவும் அது செயல்படுகிறது. (2தீமோத்தேயு. 3:16,17); (யாக்கோபு 1:25).

கிறிஸ்துவே இந்த சபையை எருசலேமில் ஸ்தாபித்தார் (மத்தேயு 16 : 18; அப்போஸ்தலர் 2). இதன் பொருள் சபையானது தனிப்பட்ட மனிதர்களுக்கோ, உங்களுக்கோ எனக்கோ உரியதல்ல. அது இங்கிலாந்தில் ஸ்தாபிக்கப்பட (துவங்க) வில்லை, ஆதலால் அது இங்கிலாந்து சபையல்ல. அது அமெரிக்காவில் ஸ்தாபிக்கப்படவில்லை, ஆதலால் அது அமெரிக்கா சபையல்ல. மாறாக, அது ஆசியாவிலுள்ள எருசலேமில் ஸ்தாபிதம் பெற்றது. இது புதிதாய்த் தோன்றிய இளம் சபையும் அல்ல, மாறாக இது 20 நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றியது.

அப்போஸ்தலர்கள் காலத்தில் இந்த சபையில் அங்கம் வகிக்க கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிதலாகிய ஒரே ஒரு வழி மாத்திரமே இருந்தது. சத்தியத்தைக் கேட்டு, (ரோமர் 10:17), விசுவாசித்து, (எபிரேயர் 11:6), தங்களின் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, (அப்போஸ்தலர் 17:30), கிறிஸ்துவை அறிக்கை செய்து (ரோமர். 10:10), பாவ மன்னிப்பிற்கென (தண்ணீரில் அடக்கம் பண்ணப்பட்டு) ஞானஸ்நானம் பெற்று, (அப். 2:38) இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். (அப்போஸ்தலர் 2:47), கர்த்தர் இன்றைக்கும் அதையேதான் செய்கிறார். இதன் அங்கத்தினர்கள் கிறிஸ்தவர்கள் என்று மாத்திரமே அழைக்கப்படுகின்றனர். (அப். 11:26); 1பேதுரு 4:16), அது கிறிஸ்துவின் சபை அல்லது தேவனுடைய சபை என்று அறியப்பட்டிருந்தது. (ரோமர். 16:16; அப். 20:28). அது கிறிஸ்துவின் சரீரம் என்று பேசப்பட்டது. (1கொரிந்தியர் 12:27), சரீரம் என்பது சபையாக கூறப்படுவதால், (கொலோசேயர் 1:18), இதன் எழுத்தாளர் மீண்டும் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகிய சபை, கிறிஸ்துவின் சபை என்றே அழைக்கப்பட்டது. இப்படியாக, இன்றும் கிறிஸ்துவின் நாமத்தையே அதற்குத் தரித்துக் கொண்டு, கிறிஸ்துவை மகிமைப்படுத்துகிறது. (அப்போஸ்தலர் 4:12).

உலகெங்கிலும் உள்ள ஆயிரக்கணக்கான தனித்தனி பிராந்திய சபைகளைக் கொண்டு சபை அமைவு பெற்றுள்ளது. ஒவ்வொரு பிராந்திய சபையும் கூடிய ஆளுகை நெறியை கொண்டிருந்து, அன்பிலும், ஐக்கியத்திலும், ஒருமைப்பாடான நோக்கம் கொண்டுள்ளது. கிறிஸ்துவே தலையாயிருக்கிறார் (எபேசியர் 5:23). பிராந்திய சபைகள் போதிய அளவுக்கு பெரிதாகவும், ஆவிக்குரிய பலம் வாய்ந்ததாகவும் வளரும்போது, வேதாகமஅடிப்படையில் தகுதி வாய்ந்த நபர்கள் இருந்தால், அந்தந்த பிராந்திய சபைகளில் தங்களுக்கென மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் பிரசங்கியார்களையும், போதகர்களை (ஆசிரியர்களையும், நியமித்துக் கொள்கிறது. (1தீமோத்தேயு 3;தீத்து 1). ஆராதனை ஒவ்வொரு வாரத்தின்

முதல் நாள் தோறும் நடத்தப்படுகிறது (அப்போஸ்தலர் 20:7) அங்கத்தினர்கள் ஒன்றாகக் கூடி வேத வசனங்களைக் கற்கின்றனர் (2தீமோ. 2:15) ஜெபிக்கின்றனர் (1தெசலோனிக்கேயர் 5:17), பாடுகின்றனர் (எபேசி. 5:19), கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுகின்றனர் (1கொரிந்தியர் 11), காணிக்கை கொடுக்கின்றனர். (1கொரிந்தியர் 16:2).

தேவன் தம்முடைய மக்கள் உலகத்தாரால் கறைபடாதபடி பரிசுத்தமும், குற்றமற்றவர்களுமாய் இருக்கவேண்டும் என்று விரும்புகிறார் (எபேசியர் 5:27). உலகமெங்கும் சுவிசேஷத்தை பிரசங்கிப்பதே இதன் பணி (மாற்கு 16:15,16), மேலும் தேவையுடையோரின் துயர் துடைப்பதும் இதன் பணியாகும். (யாக்கோபு 1:27). இறுதி வரை உண்மையாய் வாழ்ந்தவர்களுக்கு ஜீவ கிரீடம் வழங்கப்படும் (வெளிப்படுத்தின விசேஷம் 2:10; மத்தேயு 25).

இதுதான் கிறிஸ்துவின் சபை - கர்த்தருடைய - வேதாகமத்தில் நீங்கள் வாசிக்கும் ஒரே சபை. இதைக் குறித்து இன்னும் அதிகமாய்த் தெரிந்து கொள்ளுங்கள். அப்பொழுது தான் நீங்கள் கிறிஸ்துவின் சபையில் அங்கமாவீர்கள். அப்பொழுதுதான் பரலோக பாக்கியத்தையும் பெறுவீர்கள்.

**J.C. சோட்**


## சென்னை ஆசிரியர் பயிற்சிப்பள்ளி

## வேதாகமத்தைக் கற்றுக்கொள்ள அரிய வாய்ப்பு

### மாணவர்கள் சேர்க்கை அறிவிப்பு

ஆண்டுதோறும் ஜூன், செப்டம்பர், ஜனவரி ஆகிய மாதங்களில் மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். மாணவர்களுக்கு சிறந்த வேதாகம பயிற்சியுடன் "கிரேக்க மொழி" ஒரு பயிற்றுப் பாடமாக மூன்றாம் வருடத்தில் கற்றுத் தரப்படுகிறது.

**பயிற்சிக் காலம்** : 3 வருடங்கள் (செமஸ்டர் முறை)
(தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளில்)

**கவனிக்க வேண்டியவை :**

1. தமிழ் அல்லது தெலுங்கு எழுதவும், படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும்.
2. கிறிஸ்துவின் சபையாராக இருக்க வேண்டும்.
3. 17 வயது பூர்த்தியானவராக இருக்க வேண்டும்.
4. திருமணமாகாதவராக இருக்க வேண்டும்.
5. பிராந்திய சபையின் ஊழியரின் மூலமாக தொடர்பு கொள்ள வேண்டும்.

**குறிப்பு**

1. மூன்று ஆண்டுகள் தொடர்ந்து பயிற்சி முடிப்பவர்களுக்கு தகுந்த "சான்றிதழ்" வழங்கப்படும்.
2. மாணவர்களுக்கு தங்கும் வசதி, உணவு மற்றும் மாதந்தோறும் சிறு ஊக்கத் தொகை அளிக்கப்படும்.

***விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.***

அணுக வேண்டிய முகவரி :

இயக்குநர் , சென்னை ஆசிரியர் பயிற்சிப்பள்ளி,
7/35, லாக் தெரு, கோட்டூர், சென்னை–85. தொலைபேசி : 044 – 4472895

# நீங்கள் இதைப் பற்றி எண்ணியதுண்டா?

இன்றைக்கு மக்கள் தங்களுடைய மையநோக்கமாக கிறிஸ்துவையும், அவர் தங்களுக்காக செய்த தியாகத்தையும் மாத்திரம் பெரிதாக நினைத்துக் கொண்டு, சபைக்கு மிகக் குறைந்த மதிப்பையே தருகிறார்கள்.

ஆனால், உண்மை யாதெனில், தேவனுடைய பார்வையில் முக்கியமானதாக இருப்பது சபையே! சரித்திரத்தை நாம் கவனித்து பார்க்கையில் தேவனுடைய இலக்கு இயேசுவின் மரணமல்ல, ஆனால் அந்த மரணத்தினால் தேவன் வெற்றிகரமாக செய்து முடித்ததே - மனுக்குலத்தின் ஆத்துமாக்களை தன்னிடத்தில் திருப்பிக் கொண்டதே அப்பெருஞ்செயல். சபையைப் பற்றியதான விளக்கம் யாதெனில், மீட்கப்பட்ட மனிதர்களின் கூட்டம் என்பதே. இந்த காரணத்திற்காகத்தான் கிறிஸ்து தாமே சபைக்காக பாடுபட்டார்.

நித்திய ஜீவனைக் உண்டாக்குவதற்க்காக தன்னையே மரணத்துக்கு ஒப்புக் கொடுத்த அவரை ஒருபோதும் நாம் குறைத்து மதிப்பிடக்கூடாது. பிதாவாகிய தேவனின் பார்வையிலும், இயேசு கிறிஸ்துவின் பார்வையிலும் மிகவும் விலையேறப்பெற்ற அந்த காரியத்தை நாம் குறைவாக எண்ணிவிடக்கூடாது? ஏனென்றால், தனக்காக சபையை சம்பாதிக்க இயேசு மிக உயரிய தியாகத்தை செய்யவேண்டியிருந்தது.

**நீங்கள் இதைப்பற்றி எண்ணியதுண்டா?**

ஒவ்வொரு உயிருள்ள மனிதனும் ஒரு பாதையிலே பிரயாணித்துக் கொண்டிருக்கிறான். சரீரப் பிரகாரமாக நாம் பார்த்தால், நாம் அனைவரும் வாழ்விலிருந்து மரணத்துக்கு சென்று கொண்டுள்ளோம். நாம் பயணிக்கிற இந்த பாதை ஒருவேளை ஆவிக்குரிய வாழ்விற்கு அழைத்துச் செல்வோம். அல்லது ஆவிக்குரிய மரணத்தில் அந்தப் பாதை முடியலாம். ஆனால், இதில் தவிர்க்க முடியாத ஒரு கருத்து யாதெனில், நாம் எல்லோருமே ஓர் எல்லையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறோம். எந்த முடிவை நாம் அடையப் போகிறோம்?

பழங்காலத்து மதங்களின் கடவுள்களையும், சடங்குகளையும் பின்பற்றுவோமோ? புராண காலத்து கதைகளையும், பழக்கங்களையும் பின்பற்றுவோமோ? பெரும்பான்மையானோரின் பாதை நம்மைக் கவருமோ? நம் பெற்றோர்களின் தேர்வு, நம்முடையதாகவும் இருக்குமோ? மனிதனால் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஒரு மதம் நம்முடையதாக இருக்குமோ? நமக்கு அருகாமையில் இருக்கும் பிரிவினைக் கூட்டம் நம்மைத் திருப்த்தி படுத்துமோ? அல்லது எந்த மார்க்கமுமின்றி நம்முடைய அளவுகோலைக் கொண்டு நம்மை நாமே நல்லவர்கள் என்று தீர்த்துக்கொள்வோமோ! நாம் எப்படிச் செய்கிறோம் என்று எண்ணியதுண்டா!

**நீங்கள் இதைப்பற்றி எண்ணியதுண்டா?**

ஒட்டு மொத்தத்தில் பார்த்தால், ஆயிரக்கணக்கான பாதைகளில் பயணிக்க

வேண்டும் என்று மக்கள் தீர்மானிக்கிறார்கள். எல்லா பாதைகளும் ஒன்றுதான், ஒரு வித்தியாசமுமில்லை என்று கருதுகிறார்கள். ஆனால், அங்கு வித்தியாசம் உண்டு. உண்மை என்னவென்றால், ஆவிக்குரிய வாழ்வு அல்லது மரணத்தை அந்த பயணத்தின் முடிவில் அடைகிறோமோ என்ற அந்த வித்தியாசத்தை நாம் கண்டுபிடிக்க வேண்டும்.

நாம் தேவர்களையும், பழங்கால மதச் சடங்குகளையும் பின்பற்றிக் கொண்டிருக்கிறோமா? மத ஆகார முறைகளையும், தியானங்களையும் செய்து கொண்டுள்ளோமா? பெரும்பாலோர் சென்று கொண்டிருக்கும் பாதை நம் முன் தெரிகிறதா? அருகிலுள்ள நாமகரணக் கூட்டம் நம்மை திருப்திபடுத்திக் கொண்டுள்ளதா? பெற்றோர் எதைச் சார்ந்திருக்கிறார்களோ அதையே நாமும் சார்ந்திருக்கலாம் என்று நினைக்கிறோமா? மனிதனால் தொடங்கப்பட்ட மதத்தை பின்பற்றுகிறோமா? நாம் நம்மளவில் நல்லவர்களாயிருந்தால் போதும் எந்த மதத்தையும் பின்பற்ற தேவையில்லை என்று எண்ணுகிறோமா?

**நீங்கள் இதைப்பற்றி எண்ணியதுண்டா?**

வேதாகமம் கூறுகிறது, "மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்". (நீதி : 14:12).

"கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்" (எரே : 10:23)

"அதற்கு இயேசு : நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோ:14:6). "நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான்......." (யோ: 10:9)

இயேசு எதற்கு வாசலாயிருக்கிறார்? "நானே ஆடுகளுக்கு வாசல் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்கிறார். "நானே நல்ல மேய்ப்பன். பிதா என்னை அறிந்திருக்கிறது போலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறது போலவும், நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன். ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன். இந்த தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டு வர வேண்டும். அவைகள் என் சத்தத்துக்கு செவி கொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும், ஒரே மேய்ப்பனுமாகும். (யோ: 10:7, 14-16).

**நீங்கள் இதைப்பற்றி எண்ணியதுண்டா?**

பல வழிகள் உள்ளன, நாம் அதில் சிறந்ததை தெரிந்தெடுத்துக் கொள்ளலாம் என்று மனிதர்கள் தங்களுக்குத் தாங்களே சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால், தேவனுடைய குமாரனும், நம்முடைய இரட்சகருமான இயேசுகிறிஸ்து, இரண்டே வழிகள் உள்ளன. மனிதர்கள் கணக்குப்படியான, நூறுகளோ அல்லது ஆயிரங்களோ அல்ல, இரண்டு மட்டும்தான் என்கிறார்.

இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப்போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது. அதின் வழியாய் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்.

"ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டு பிடிக்கிறவர்கள் சிலர்". (மத்: 7:13,14).

**நீங்கள் இதைப்பற்றி எண்ணியதுண்டா?**

இயேசுவின் கூற்றின்படி

| | | |
|---|---|---|
| எத்தனை சத்தியங்கள் உள்ளன? | – | ஒன்று. |
| எத்தனை இரட்சகர் உள்ளனர்? | – | ஒன்று. |
| எத்தனை வாசல்கள் உள்ளன? | – | ஒன்று. |
| எத்தனை மேய்ப்பர்கள் உள்ளனர்? | – | ஒன்று. |
| எத்தனை மந்தைகள் உள்ளன? | – | ஒன்று. |
| எத்தனை வழிகள் உள்ளன ஜீவனுக்கு போவதற்கு? | – | ஒன்று. |

**நீங்கள் இதைப்பற்றி எண்ணியதுண்டா?**

ஜீவனுக்குப் போவதற்கு ஒரே ஒரு வழிதான் என்று இயேசு கூறுகிறார். அந்த ஒரே வழி அவரே. அந்த ஒரே வழியைப் பின்பற்றின ஆதிக் கிறிஸ்தவர்கள் பிரபல்யமானவர்களாக இல்லை. அவர்கள் போதித்த கொள்கையும் பிரபல்யமானதாக இல்லை. அவர்கள் வெறுக்கப்பட்டவர்கள், உபத்திரவப்படுத்தப்பட்டவர்கள், ஏனென்றால், தங்கள் தேவன் தங்களுக்கு உபதேசித்ததை அவர்கள் மற்றவர்களுக்கு உபதேசித்ததின் காரணத்தால். அதில் பல வழிகள் இல்லை. ஏற்றுக் கொள்ளக் கூடிய மதங்கள் பல அதில் இல்லை. அங்கே பல சபைகள் இல்லை. இரட்சிக்கப்படுவதற்கு **பல வழிகள்** இல்லை. தேவனை ஆராதிப்பதற்கென்று பல விதமான வழிகள் இல்லை. "ஒரே ஒரு வழி"யைத்தான் இயேசுவும் போதித்தார், ஆதிக் கிறிஸ்தவர்களும் போதித்தனர்.

இயேசு சொன்னார், "நான் என் சபையை கட்டுவேன்" (மத் 16:18) என்று. தேவ ஆவியினால் ஏவப்பட்டு பவுல் எழுதுகிறார். (எபேசியர் 5: 25-27).

"புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூறுங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து,

"தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும்,

"கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக் கொள்வதற்குத் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்".

தன்னுடைய சபைக்காக, தன் மக்களுக்காக, தன் இராஜ்ஜியத்திற்காக, தன் மணவாட்டிக்காக தான் மீண்டும் வரப்போகிறார் என்று இயேசு வாக்குக் கொடுத்திருக்கிறார். (வெளி : 22:12, யோவான் 14:3, மத்தேயு: 25:31-46). நீங்களும், நானும் அந்த "ஒரே வழியில்" இருக்கிறோமா?

**பெட்டி சோட்** | **ரேச்சல் நாயகம்**



# பண்டிகை நாளில்.....

மகிமையையும் மகத்துவத்தையும் மகுடமாக சூடியிருக்கும் மகாதேவன், வையகத்தை ஆதாரங்களின் மேல் ஸ்தாபித்து, ஆழிகளால் அதை மூடியபின்பு பர்வதங்களின் மேல் நின்ற ஜலத்தை தமது குமுறலின் தொனியால், ஓரிடத்தில் கூட்டி அவைகள் பூமியை மீண்டும் மூடாதபடிக்கு எல்லைகளை ஏற்படுத்தி, வெட்டாந்தரையை வெளிப்படச் செய்து, மண்ணெடுத்து மனிதனாக வளைத்து, சுவாசத்தை அவனுக்கு ஈந்து, சிருஷ்டிப்பின் முடியாக திகழும்படி தயவு செய்த அவர், பகலவனையும், சந்திரனையும் காலங்களை அளவிடும்படி சிருஷ்டித்த அவருடைய அதிசயக்கும் கரங்களாலே, காலங்களின் மிகுதியான ஒருவருடத்தை இனிதாக கழித்திட்ட நாம், அவ்வருடத்தில் கற்களைக் கொண்டு பாடம் கற்றோம் வாலிபர்களாகிய நீங்கள், சிருஷ்டிகரை நினைக்க ஏதுவாக, இவ்வருடத்தின் முதல் மாதத்தில் "**இரட்சிக்கப்பட என்ன செய்யவேண்டும்**" என்ற மாபெரும் கேள்விக்கு விடைகாணும் விதமாக, அப்போஸ்தலர் நடபடிகள் நூலில் இடம் பெற்றிருக்கும் "**மனந்திரும்பியோரின் பட்டியலின்**" முதலாவதை மாத்திரம் கவனித்து அதன் மூலம் பயன் பெறப்போகிறோம்.

வாலிபர்களே! மனிதன் மரணத்தினால் மக்கிப்போகிறவனல்ல, அவன் சரீரம் அழிந்தாலும், ஆத்துமா ஆண்டவர் நியமித்த ஸ்தலத்திற்குச் சென்று நியாயத்தீர்ப்புக்காக காத்திருக்கும். சிகரம் எட்ட சிரமமின்றி வளர்ந்திருந்த கோலியாத்தை எளிதாக வீழ்த்திய தாவீது எழுப்புகிற கேள்வியையும் அவன் தரும் பதிலையும் கவனியுங்கள், "யார் அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத்திருப்பான்?.... தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக்கொடாமலும், கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே" (சங்: 24:4) என்கிறார். அவருடைய புதல்வன் கூறுவதையும் பாருங்கள், "ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொள்ளுகிறவன் ஞானமுள்ளவன்" (நீதி: 11:30) என்று யாத்துக் கொடுத்து இருக்கிறார். இவர்கள் மூலம் ஆவியானவர் கூறுகிற அறிவுரைக்கு நீங்கள் செவிமடுக்க வேண்டும் என்ற நோக்குடனே இவ்வருடம் முதல் மாதத்தில் இம்முயற்சி செய்கிறேன். ஏற்றுப் படித்திடுக.

**எருசலேமில் இயேசுவின் அப்போஸ்தலர்கள்**

சிலுவையில் தொங்கிய இயேசு, அன்புத் தந்தையிடம் ஆருயிரை ஒப்படைத்து தலைசாய்த்தார். நீலவானில் இடியொலித்து கதிரவன் ஒதுங்கிக்கொண்டது, பாறை கொண்ட பூமியும் திடீரென்று வெடித்தது. பூமிதனை வானத்து மீனினங்கள் தொட்டது. நூற்றுக்கு அதிபதியும், இவர் தேவமைந்தன் என்ற சேதி மெய்தான் என்று அறிந்தான். மரித்த இயேசு அழிவைக் காணாமல், வெள்ளி முளைத்தெழுந்த ஞாயிறு அன்று விடிவெள்ளியாய் குறித்தெழுந்தார். எழுந்த இறைமைந்தன் 40 நாட்கள் கழித்து விண்ணேறிப்போகையில் சொன்ன

செய்தி கேளீர்! "அன்றியும் **மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும்** எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் பிரசங்கிக்கப்பட வேண்டியது..... நீங்களோ (அப்போஸ்தலர்கள்) உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்" என்றார் (லூக்கா 24:47, 49).

பூவுலகை மீட்க வந்த பூமான், வேறொரு சமயத்தில், "இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யம் **பலத்தோடே வருவதைக்** காணுமுன், மரணத்தை ருசிபார்ப்பதில்லை யென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மாற்கு 9:1) வாலிபர்களே! இயேசு பலத்தோடே ராஜ்யம் வரும் என்றார். இச்செய்தியை மனதில் நிறுத்தி தொடர்ந்து படியுங்கள். அவர் பரமேறிச் செல்லும் போது அவர் சொல்லுவதைக் கவனியுங்கள், "நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள்.... பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்" அப்: 1:5,8

வாலிபர்களே! இதுவரைக்கும் நீங்கள் வாசித்ததை, சுருங்கக் கூறுகிறேன் புத்தியைக் கூர்மையாகத் தீட்டிக்கொண்டு கவனியுங்கள் "**ராஜ்யம் பலத்தோடே வரும்**" என்ற நமது ஆண்டவர் "**பரிசுத்த ஆவி வரும்போது பெலனடைவீர்கள்**" என்றும் உரைத்தார். இந்த செய்தியை கேட்கிற ஒருவர் பரிசுத்த ஆவி வருகிறாரா என்று ஆராய்ந்து பார்ப்பான். அவர் வந்தார் என்றால் **பெலன்வரும்,** பெலன் வந்தால், ராஜ்யம் வரும் என்ற புரிந்து கொள்ளுதலுடன் அப்படிப் பார்ப்பான் சரி நாமும், தேவன் நமக்குத் தந்த அறிவை வைத்து பரிசுத்த ஆவி வந்தாரா என்று பார்ப்போம்.

இயேசுவிடம் எருசலேமில் காத்திருங்கள் என்ற கட்டளை பெற்ற அப்போஸ்தலர்கள் எருசலேம் நகரில் அவர் பரமேறிச் சென்ற பின் 10 நாட்களாக காத்திருந்தனர்.

வாலிபர்களே! இப்பொழுதுதான் நாம் அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்திற்கு கவனத்தைத் திருப்புகிறோம். ஆத்துமாவைக் காத்துக்கொள்ளவேண்டும் என்ற ஆவல் கொண்ட நீங்கள் திறந்த மனதுடன் இதை படிப்பீர்கள் என நம்புகிறேன். இயேசு சொன்ன வேத வசனங்கள் நம்மை நியாயந்தீர்க்கிறதாக இருக்கிற படியால் (யோ. 12:48) நீங்கள் அவ்வசனத்திற்கு செவி சாய்ப்பீர்கள் என நம்புகிறேன். சரி, அப்போஸ்தலர்கள் எருசலேமில் கூடிய நேரம். எருசலேமின் வீதிகளில், குவலயத்தின் நான்கு திசைகளிலிருந்தும் குவிந்திருந்தனர் தேவ பக்தியுள்ள யூதர்கள். பஸ்கா பண்டிகை துவங்கி 50 நாட்களாக பண்டிகையை அநுசரித்தார்கள். பெந்தகோஸ்தே என்ற நாளுக்கு ஐம்பதாவது நாள் என்ற அர்த்தமும் உண்டு. அப்பண்டிகைக்கு வாரங்களின் பண்டிகை என்ற பெயரும் உண்டு (லேவி 23:15-20)

அப்போஸ்தலர்கள் எருசலேமில் கூடி வந்த இந்த நாளில் ஆவியானவர் அவர்கள் மேல் இறங்கினார். பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து ஒரு முழக்கம் உண்டானது. அங்கே இருந்த 12 அப்போஸ்தலர்களும், "ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே


வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்" (அப் : 2:4) இதை வாசித்த உடனே! உங்கள் மனதில் "பளிச்" என்று ஒரு எண்ணம் உதித்திருக்க வேண்டுமே. ஆவியானவர் வந்திருக்கிறார். அப்படியானால் இயேசு சொன்னதுபோல பெலன் வந்திருக்கும், பெலன் வந்தால் தேவனுடைய ராஜ்யமும், வந்திருக்கும் என்பதே அவ்வெண்ணம். நிச்சயமாக, நீங்கள் அதற்கு பின்பு வேதத்தில் ராஜ்யத்தைக் குறித்து வாசித்தால் அது ஏற்கனவே இருக்கிற ஒன்றாகவே பேசப்படும். (கொலோ: 1:13; வெளி 1:7) இயேசு சொன்னதைப் போல அப்போஸ்தலர்கள் சிலர் மரணத்தை ருசிபார்ப்பதற்கு முன்னமே ராஜ்யம் வந்தது (மாற்: 9:1) வானமும் பூமியும் ஒழிந்தாலும் அவர் வார்த்தைகள் ஒழிவதில்லை என்பதை வாலிபர்களாகிய நீங்கள் நிச்சயம் ஏற்றுக் கொண்டிருப்பீர்கள் என நம்புகிறேன்.

வானத்தின் கீழிருந்து எருசலேமிற்கு வருகை தந்த யூதர்கள், இவைகளைக் கண்டு பிரமித்தார்கள். சிலர் குடிபோதையில் உளருகிறார்கள் என்று நகைத்தார்கள். அந்த சமயத்தில் தான் ஐம்பத்தி மூன்று நாட்களுக்கு முன்பு இயேசுவை மறுதலித்து, பின்பு மனந்திருந்திய அப்போஸ்தலன் பேதுரு எழுந்து ஒரு மாபெரும் பிரசங்கம் செய்கிறான். இயேசு இந்த உலகில் இருந்தபோது தனது சீடர்களாகிய அப்போஸ்தலர்களிடம், "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" (யோ:16:13) என்றார்.

எனக்கருமையான வாலிப உள்ளங்களே! அன்று பேதுருவின் மூலம் ஜீவரட்சனை செய்யும்படி பரிசுத்த ஆவியானர் அவனை சத்தியத்திற்குள் வழி நடத்தினார். பேதுரு பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டுப் பேசினார். யோவேல், சங்கீதக்காரன் இவர்கள் சொன்ன தீர்க்கதரிசனம் நிறைவேறிவிட்டது என்றும், இயேசுவை ஜீவாதிபதியை அக்கிரமக்காரர்களின் கரத்தில் கொடுத்து கொலை செய்தீர்கள் என்றும், அவர்களது பாவத்தைச் சுட்டிக்காட்டி பேசினார் பேதுரு. (அப். 2:23) நீங்கள் செய்த பாவத்திலிருந்து விடுதலைபெற யோவேல் சொன்னதுபோல "கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான்" என்றும் முழங்கினார். அத்தோடு நிறுத்தாமல் நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார் என்று விளம்பினார்பேதுரு. இதை கேட்ட மாத்திரத்தில் என்ன செய்தார்கள் இஸ்ரவேலர்கள்! இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்ற கேள்வி எழுப்பி, மனந்திரும்பி இயேசுவின் அதிகாரத்தின்படி தண்ணீரில் மூழ்கி திருமுழுக்குப் பெறவேண்டும் என்ற பதிலைப் பெற்றார்கள். அன்றைய தினம் 3,000 பேர் கர்த்தருக்கு கீழ்ப்படிந்தார்கள். இதை அறிந்த வாலிபர்களாகிய நாம் கர்த்தருக்குச் சித்தமானால் இவ்வாண்டின் தொடக்கத்திலேயே அவருக்குக் கீழ்ப்படிவோம். தேவன் தாமே இவ்வாண்டை ஆசீர்வதித்து தருவாராக!

**ஜே. பிக்கின்ஸ்**

# உன்னதப்பாட்டு ஓரு கண்ணோட்டம்



காலம் : ஏறக்குறைய கி.மு. 960

ஆசிரியர் : சாலொமோன் ஞானி

## இந்நூல் பற்றி....

1) இந்நூலின் தலைப்பு, உன்னத பாட்டு (THE SONG OF SONGS). இதுபாடல்களில் எல்லாம் மிகச் சிறந்த பாடல் என்ற அர்த்தம் கொண்டதாக இருக்கிறது.
2) இந்நூல், புதிய ஏற்பாட்டில் ஒரு முறை கூட மேற்கோள் காட்டப்-படவில்லை.
3) இந்நூலில் 117 வசனமே இருந்தாலும் எபிரேயத்திலே 470 வித்தியாசமான பதங்கள் பயன்படுத்தப்படுகிறது. அதில் 47 வார்த்தைகள் வேதாகமத்தில் வேறு எந்த புத்தகத்திலும் இடம் பெறவில்லை. 51 வார்த்தைகள் வேதாகமத்தின் மற்ற நூல்களில் 5 அல்லது அதற்குறைவாகவே இடம் பெறுகிறது.
4) சாலொமோன் ஞானி எழுதின நீதிமொழிகள், பிரசங்கி ஆகிய நூலில் இடம் பெறுகிற இயற்கையின் வர்ணனை இதிலும் இடம் பெறுகிறது. திராட்சை, திராட்சை தோட்டம், சோலை என்கிற பதம் குறைந்தது 20 முறை வருகிறது.
5) வேதாகமத்தில் உள்ள நூல்களில், முழுவதும் பேச்சினால் நிறைந்த நூல் இது ஒன்றே. இந்நூல் முழுவதும் உரையாடல் போலில்லாமல் தனி பேச்சாகவே இருக்கிறது.
6) இந்நூல் முழுவதிலும் தேவனின் நாமம் ஒரு முறை கூட காணப்படவில்லை.
7) இந்நூலில் அழகு, (143 முறையும்) அன்பு, (18 முறையும்) நேசர் (33 முறையும்) இடம் பெற்றுள்ளது.

## இந்நூலின் செய்தி

1) திருமண அன்பிலுள்ள அழகை இந்நூல் வர்ணிக்கிறது.
2) "ஒருவனுக்கு ஒருத்தி" என்பதே தேவனுக்கு ஏற்புடைய திருமணமாக இருக்கிறது.

# எகிப்தின் பொக்கிஷங்களை வெறுத்தவன்




*The Coffin of Pharaoh Tutankhamen*

எனக்குப் பிரியமான சிறுதம்பி, தங்கைகளே, உங்கள் யாவருக்கும் எனது புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். தேவன் நமக்குத் தந்த இந்த வருடம் முழுவதும் அவரே பாதுகாப்பாய் இருந்து சிறு பிள்ளைகளாகிய நம்மை வழி நடத்துவாராக. இப்பொழுது, நாம் நமது பாடங்களுக்கு கடந்து செல்வோம். இம்மாதம் தேவன் நமக்கு கொடுக்கும் அறிவுரையைக் கேட்கலாமா? வாருங்கள் என்னோடு.

இம்மாதம் நாம் பிரமாணங்களின் தந்தையாகிய மோசேயிடமிருந்து சில பாடங்களை கற்றுக் கொள்வோம். மோசே வளர்ந்து பெரியவனான போது, அவன் கிறிஸ்துவை உலகத்திற்குள்ளாக கொண்டுவர தனக்கும் ஒரு பங்கு இருப்பதை அறிந்து வைத்- திருந்தான். அதைப் பற்றி வேதாகமம் என்ன கூறுகிறது தெரியுமா? அவன் தேவனின் திட்டத்திற்குரிய தன் பங்குகளை எகிப்திலிருந்த திரளான செல்- வங்களை விட மேலாக எண்ணினான் (எபி. 11;26) என்று.

இச்செயல் மோசேயின் மிக உயர்வான தியாகமாகவும், அவன் விசுவாசத்தைக் காட்டுகிறதாகவும் இருக்கிறதல்லவா! ஏனென்றால் பொதுவாக எகிப்தியர்கள் அனைவரும் அந்நாளில் செல்வந்தர்களாகவே இருந்தனர். சில ஆண்டுகளுக்கு முன்பு, புகழ்பெற்ற புதை பொருள் ஆராய்ச்சியாளரான ஹவார்ட் கார்டர் (HOWARD CARTER) எகிப்தின் வளம் எவ்வளவு சிறப்பான- தென்பதை குடான்கமேன் என்ற அரசனின் கல்லறையின் மூலம் வெளிப்படுத்தியிருக்கிறார். “இவன் பிரபலமாவதற்கு

முன்பாகவே மரித்துப்போன ஒரு இளம் ராஜா" தனது 18ம் வயதிலேயே இறந்துபோனான். அவர் தனது, ஆராய்ச்சியின் முடிவாக 5,000க்கும் மேற்பட்ட புதையல்களை அவன்



கல்லறையில் கண்டறிந்தார். அவை பெரும்பாலும் தங்க கட்டிகளாகவே காணப்பட்டனவாம். என்ன, நம்ப முடியவில்லை தானே? ஒரு எகிப்திய முதுமொழி இப்படிக் கூறுகிறது. "எகிப்தில் தங்கம் தூசு போன்று மிக எளிதாக எல்லா இடங்களிலேயும் இருக்கும்" என்று. இந்த முதுமொழி இக்கண்டுபிடிப்புகளுக்கு, மேலும் ஆதாரமாய் விளங்குகிறது. பொதுவாக, ராஜாக்களை அடக்கம் செய்யும் தங்கத்தலான சராசரி சவப் பெட்டியின் மதிப்பு சுமார் ரூ. 1,17,50,000 இருக்குமாம். (ஒரு கோடியே பதினேழு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபாய்) ஆகும்.

தேவனுடைய சித்தம் செய்யும்படிக்கு (எபிரேய அடிமைகளின் கஷ்டத்தில் சேர்ந்து) இத்தனை செல்வங்களையும் துறந்து தேவனுடைய ஜனங்களோடு பாடுகளை அனுபவிக்கத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட மோசேக்கு எப்படிப்பட்ட விசுவாசம் இருந்திருக்கும் என எண்ணிப்பாருங்கள். ஆனால் பொன்னைக் காட்டிலும், அதிகவிலையேறப்பட்டவைகள் தன்னுடைய விசுவாசத்திற்கு இருப்பதாக மோசே உணர்ந்திருந்தான். ஆகவே தான், அவன் எகிப்தின் செல்வங்களை துச்சமாக மதித்து, அரண்மனை வாழ்வுக்கு டாட்டா காட்டினான். தேவனை நாம் சேவிப்பது பூமியின் வாழ்க்கையில் மிக முக்கியமான ஒன்றாகும். ஆகையால், நாம் இச்சிறு பிராயத்தி பின்பற்ற அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

மனன வசனம் : எபி. 11:25

தமிழில்
ABEL R. NAYAGAM.

# வெளிப்படுத்தின விசேஷம்

அதிகாரம் 19; 10-21

**வெ**ளி. 19;10, "இயேசுவைப் பற்றின சாட்சி, தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது" என்று சொல்லுகிறது. கடந்த 30 ஆண்டுகளுக்குள்ளாக, "கி.பி. 70 உபதேசம்" என்று பொதுவாக அழைக்கப்படும் ஒரு கொள்கை எழும்பி, சில கிறிஸ்துவின் சபை வட்டாரத்துக்குள்ளே வளர்ந்திருக்கிறது. இத்தொடரின் ஐந்தாம் கட்டுரையில் இக்கொள்கை பற்றி விரிவாகப் பேசப்பட்டுள்ளது. ஆனால், அவைகளைக் கொஞ்சம் நினைவுபடுத்திக் கொள்வது, நமக்குக் கொஞ்சம் பிரயோஜனமாயிருக்கும். 1971-ம் ஆண்டு, அமெரிக்காவிலுள்ள, ஓகியோ மாநிலத்தின், வாரன் என்ற இடத்தில் மேக்ஸ் கிங் (MAX KING) என்பவரால் இக்கொள்கை அறிமுகமாயிற்று. இந்த மேக்ஸ் கிங்கும், அவரைப் பின்பற்றுபவர்களும், புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்கள் எல்லாம், அதாவது கிறிஸ்துவின் வருகை, உலகத்தின் முடிவு, உயிர்த்தெழுதல், நியாயத் தீர்ப்பு உட்பட அனைத்தும் கி.பி. 70-க்கு முன்பாக எழுதப்பட்டு, நிறைவேறிவிட்டது என்று உபதேசிக்கின்றனர். இந்தத் தவற்றை நம்பிப் போதிக்கிறவர்களுக்கு வெளி. 19;10 வசனம், வேதாகமத்தில் மிக முக்கிய வசனமாக இருக்கிறபடியால், இந்த உபதேசம் குறித்து மீண்டும் குறிப்பிடுகிறோம். இந்த கொள்கைக்காரார்கள் இந்த வசனத்தை மிகத் தவறாகப் புரிந்து கொண்டு, வசனத்தைப் புரட்டுகிறார்கள் என்பது மிகவும் கவனிக்கத்தக்கது.

கி.பி. 70 கொள்கைப்படி, வெளி. 19;10 வசனம், தீர்க்கதரிசனத்தின் 'தன்மை' அல்லது 'பாங்கு' இவற்றின் அறிவிப்பாக உள்ளது. இக்கொள்கைக்குப் ஆதரவு கொடுப்பவர்களுக்கு "தீர்க்கதரிசனத்தின் ஆவி" என்கிற சொற்றொடர் எல்லா தீர்க்கதரிசனங்களும் அதன் தன்மையில், "ஆவிக்குரியதாயிருக்கிறது" என்று பொருள்படும். அவர்கள் அது கிறிஸ்துவின் ஆவிக்குரிய கிரியைகளுக்கு ஒத்திருக்கிறதென்கின்றனர். இதிலிருந்து, புதிய ஏற்பாட்டின் எந்தத் தீர்க்கதரிசனமும் சொல்லர்த்த ரீதியிலான நிறைவேறுதலைக் கொண்டதல்ல என்று முடிவு செய்கின்றனர். ஆகவே, அவர்கள் புதிய ஏற்பாட்டின் எல்லா தீர்க்கதரிசனங்களும், உருவக ரீதியில்

நிறைவேறிவிட்டது என்று வலியுறுத்துகின்றனர். உண்மையில், புதிய ஏற்பாடு எந்த தீர்க்கதரிசனத்தையும், சொல்லர்த்த ரீதியில் நிறைவேறும் என்று விசுவாசிக்கிற ஒவ்வொருவரும், (அது இயேசு மீண்டும் வருவது சம்பந்தப்பட்டதாக இருந்தாலும், உலகத்தின் அழிவாக இருந்தாலும், மரித்தோரிலிருந்தான சரீர உயிரித்தெழுதலானாலும், பரலோகமானாலும், நரகமானாலும்) ஆவிக்குரிய வகையில் இல்லாமல், "மாம்சப்பிரகாரமாகவே" சிந்திக்கிறார்கள் என்று சொல்கிறார்கள்! இந்த கொள்கைக்காரர்கள், புதிய ஏற்பாட்டின் ஒன்று அல்லது அனைத்து தீர்க்க தரிசனங்களையும் புரிந்து கொள்வவதற்க்கு "உருவகபாணி" முறை கையாளப்படவேண்டுமென்று வாதிடுகின்றனர். இந்தத் தவறு இமெநேயும் பிலேத்தும் போன்றவர்களின் தவறு போன்றது. தேவன் அதை அரிபிளவைக்கு ஒப்பிடுகிறார். (2. தீமோ. 2;16,18) ஆனால், இந்தக் கொள்கையின் அஸ்திபாரம் தவறு என்பதை நாம் விளக்கும்போது, இவர்களின் ஒட்டுமொத்த கொள்கையும் பித்தலாட்டம் என்பது வெளிப்படும். இதை வெளி. 19;10 வசனப் பகுதியை சரியாகப் புரிந்து கொள்வதின் மூலம் செய்ய முடியும்.

இந்த வசனத்தில், "இயேசுவைப் பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது" என்று சொல்லப்பட்டிருக்கும் சந்தர்ப்பமானது, தீர்க்கதரிசனத்தின் ஆதாரம் பற்றியதேயல்லாமல், அதன் **தன்மை** பற்றினதல்ல. இந்த வசனத்தின் நடைப்பாங்கு. இந்த தீர்க்கதரிசனத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமென்பதாக இல்லாமல், இயேசுவைப் பற்றிய சாட்சிக்கான ஆதாரம் தேவன் தான் என்று போதிக்கிறது. மனிதனோ அல்லது தூதர்களோ அல்ல. தூதன், யோவானிடத்தில், அவன் தூதனையல்ல, தேவனை வணங்க வேண்டுமென்று சொல்கிறார். ஏனெனில், இது தூதனுடையதாயில்லாமல் கர்த்தருடைய சாட்சியாயிருக்கிறது. அது ஆட்டுக்குட்டியானவரின் கலியாணம் பற்றி தீர்த்தரிசனத்தின் ஆவியாயிருக்கிறது. ஆகவே, இந்த வாக்கியத்திலிருந்து நாம் முடிவாகத் தெரிந்து கொள்ளுவதென்னவெனில், நாம் எல்லாவற்றுக்கும் மூல ஆதாரமாயிருக்கக் கூடிய தேவனைத் தான் வணங்க வேண்டுமேயொழிய, தூதர்களையோ, தேவனுக்கு கீழாக இருக்கக் கூடிய எந்த ஒரு ஊழியரையோ வணங்கக் கூடாது. மனிதர்களும், தூதர்களும் "உடன்வேலையாட்களாக" இருக்கிறார்கள். அதன் மூலம் "அவர்கள், தேவனால் கொடுக்கப்பட்ட சாட்சியை உடையவர்களாக இருக்கிறார்கள்". உண்மையில், சாட்சியைக் கொடுத்தவராக தேவன் தான்

உள்ளார். இந்த கி.பி. 70 என்ற உபதேசக் கொள்கையைப் புரிந்து கொண்டு, அதை மறுப்பதற்கு வெளி. 19;10 வசனமானது மிகவும் முக்கியமானது. ஏனெனில், இந்தத் தவறான கொள்கை, 1998 வருடம் இந்தியச் சகோரார்களுக்குள்ளாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

வெளி. 19;11-13 வசனப்பகுதியில், கிறிஸ்து ஒரு வெள்ளைக் குதிரை ஏறி, யுத்தம் பண்ண வருகிறார் என்று வாசிக்கிறோம். வசனம் 11-ல் யோவான், "பரலோகம் திறந்திருக்கிறதையும், வெள்ளைக்குதிரையையும்" காண்கிறான். வெள்ளைக் குதிரையின் மீது ஏறியிருப்பவரைப் பற்றிய விவரிப்பு, இயேசுவுக்குப் பொருந்துகிறதாக இருக்கிறது. வெள்ளை நிறம், வெளிப்படுத்தின விசேஷத்தில் பரிசுத்தத்திற்கு அடையாளமாக, அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது. (வெளி. 3;4, 5;18, 4;41, 6;11, 7;9, 7;13,14, 19;8இ14). "உண்மையும், சத்தியமுள்ளவர்" என்று அழைக்கப்பட்டவர், குதிரையின் மீது அமர்ந்திருந்தார். (19;11). கிறிஸ்து "உண்மையும், சத்திய-முள்ள சாட்சியாயிருக்கிறார்" (வெளி. 3;14, 1;5, 3;7). வெள்ளைக்குதிரையின் மீது உட்கார்ந்திருந்த ஒருவரைப் பற்றி, வெளி 19;11 "நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம் பண்ணுகிறார்". அநேக தீர்க்கதரிசிகள், கிறிஸ்து நீதியுள்ள நியாயாதிபதியாய் இருப்பார் என்று முன்னறிவித்தார்கள். (ஏ சா. 11;4; 16;5; 31;1 எரே. 23;5, 33;5) உலகத்தின் முடிவில், தேவன், கிறிஸ்துவைக் கொண்டு "உலகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்" (அப். 17;31; 2.தீமோ. 4;8). வெளி. 19;14-21 வசனப் பகுதியில், யுத்தம் பற்றி விரிவாக வாசிக்கிறோம். வெளி. 19;12 "அவருடைய கண்கள் அக்கினி ஜீவாலையைப்" போலிருந்தது என்று சொல்கிறது. தேவனுடைய குமாரனுடைய கண்கள், அக்கினி ஜுவாலையைப் போல் இருக்கிறதென்று விவரிக்கப்பட்டுள்ளது. (வெளி. 1;14; 2;18) "அவருடைய சிரசின் மேல் அநேக கிரீடங்கள்" இருந்தன. (வெளி. 19;12). வெளிப்படுத்தல் விசேஷத்தில் கிரீடம் என்பது வெற்றியையும், அதிகாரத்தையும் விளக்குகிறது (வெளி 2:10: 3:11, 4:4,10, 6:2, 12:1) மனுஷ குமாரனைப் போன்ற ஒருவர் தலை மீது, பொற்கிரீடம் இருந்ததாக வெளி. 14;14-ல் சொல்லப்பட்டுள்ளது. கிறிஸ்து வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரம் பெற்றிருக்கிறபடியால், கிறிஸ்துவானவர் கிரீடத்திற்கு பாத்திரராயிருக்கிறார்.

கிறிஸ்து சர்வ அதிகாரமும் உடையவரென்பதும், பாவத்தின் மீதும், மரணத்தின் மீதும், முழுவெற்றி கண்டவரென்பதும், அவர், வெளி.19;12-ல் விவரிக்கப்பட்டிருக்கிறபடி, அவருடைய சிரசின் மீது அநேக கிரீடங்கள் இருந்ததென்பதற்குக் காரணமாக இருக்கலாம். அதே வெளி. 19;12,

குதிரையின் மீது ஏறியிருப்பவர், "அவருக்கேயன்றி வேறொருவருக்குந் தெரியாத ஒரு நாமம்" பெற்றிருந்தார் என்றும் சொல்கிறது. நீதிமான்களுக்காக வைக்கப்பட்டிருக்கின்ற ஆசீர்வாதங்களுள் ஒன்று, ஒருவரும் அறியாத புதிய நாமத்தை கிறிஸ்துவிடமிருந்து பெற்றுக் கொள்வது. (வெளி.2;17). அதே நேரத்தில், கிறிஸ்துவின் புதிய நாமம், நீதிமான்கள் மேல் எழுதபட்டிருக்கும் (வெளி 3:12) இது, அவருக்கே, வேறொருவருக்கும் தெரியாத நாமம் எழுதப்பட்டிருக்கும் என்று வெளி. 19;12-ல் உள்ள, கிறிஸ்துவைப் பற்றிய விவரிப்பிற்குப் பொருத்தமாக உள்ளது. வெளி. 19:13, வெள்ளைக் குதிரையின் மீது ஏறியிருப்பவர், "இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரம் தரித்திருக்கிறார்" என்று கூறுகிறது. இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரம் என்பது, கிறிஸ்துவின் இரத்தம் குறித்து வெளிப்படுத்தல் வலியுறுத்துவதற்கு ஒத்திருக்கிறது. தம்முடைய இரத்தத்தைக் கொண்டு, நம்முடைய பாவங்களை கிறிஸ்து கழுவினார். (வெளி. 1;5) (வெளி. 1;4) தம்முடைய இரத்தத்தினாலே கிறிஸ்துவினிடமாய் நம்மை மீட்டுக் கொண்டார் (வெளி. 5;9). தம்முடைய இரத்தத்தினாலே பரிசுத்தவான்களின் அங்கிகளை வெளுத்தார் (7;14). ஆட்டுக்குட்டி-யானவரின் இரத்தத்தினாலே, கிறிஸ்தவர்கள் சாத்தானை மேற்-கொண்டார்கள். (வெளி. 12;11). வெளி. 19;13, "அவருடைய நாமம் தேவனு-டைய வார்த்தை" என்று சொல்லுவதினாலே, வெள்ளைக் குதிரையின் மீது ஏறியிருந்தவர் யாரென்று அடையாளப்படுத்துகிறது. இயேசுவே வார்த்தை. (யோவான்.1;1-4, 14; 1. யோவான் 1;1-2).

வெளி. 19;14-16, ஆரம்பிக்கப்போகும் யுத்தம் பற்றிய ஆயத்தத்தை விவரிக்கிறது. வசனம் 14-ல், "பரலோகத்திலுள்ள சேனைகள் வெண்-மையும் சுத்தமுமான மெல்லிய வஸ்திரந்தரித்தவர்களாய், வெள்ளைக் குதிரைகளின் மீது ஏறி அவருக்குப் பின் சென்றார்கள்". கார்த்தருடைய சேனைக்கு மெல்லிய வஸ்திரம் என்பது பொருத்தமான ஆடை. வசனம் 8-ல், வெண்மையும், சுத்தமுமான மெல்லிய வஸ்திரம், "பரிசுத்தவான்களின் நீதியாயிருக்கிறது". இது, பிழைப்புக்கடுத்த காரியங்களில் சிக்கிக் கொள்ளாமல் தங்கள் தளபதியைப் பிரியப்படுத்தின சேனையின் குணாதிசியமாயிருக்கிறது. (2. தீமோ. 2;4). வெள்ளை அங்கியானது, மிகுந்த உபத்திரவங்களிலிருந்து வந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. (வெளி. 7;1). இயேசுக் கிறிஸ்துவின் போர்ச்சேவகர்கள் "தீமையைச் சகிக்க வேண்டும்" (2. தீமோ 2;3). வெளி.19;15, சேனைத்தலைவனின் வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது என்று சொல்கிறது. இப்படிப்பட்ட விவரிப்பு கிறிஸ்துவுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. (வெளி. 1;16, 2;12). வரப்போகும்

யுத்தத்தில், "தேசங்களை அடிப்பதற்காக" கூர்மையான ஆயுதம், கிறிஸ்துவால் பயன்படுத்தப்படவேண்டும். (வெளி. 19;15). இதே வசனம், கிறிஸ்துவானவர் இந்தச் தேசங்களை இருப்புக் கோலால் அரசளுவார் என்று சொல்கிறது. (சங். 2;9-7; சங். 110; வெளி.2;26-27, 12;5 ஆகிய வசனப் பகுதிகளையும் பார்க்கவும்). மேலும் வசனம் 15, கிறிஸ்துவானவர், "தேவனுடைய உக்கிரகோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார் என்றும் சொல்லுகிறது. வெளி. 14;10-20 வசனப் பகுதியில் நித்திய நியாயத்தீர்ப்புக்காக இதே விதமான விவரிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இவ்விவரிப்பு வெளிப்படுத்தின விசேஷம் 19ஆம் அதிகாரத்தில் இடம் பெற்றள்ள யுத்தம். உலகத்தின் முடிவிலே, இயேசுவானவர், துன்மார்க்கர் மீது நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடு வரும் போது (2. தெச. 1;7 10). தேவனுடைய கோபாக்கினை ஊற்றப்படுவதோடு தொடர்புடையதாக இருப்பதாகவே காட்டுகிறது. வெளி. 19;16, "ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா என்னும் நாமம் அவருடைய வஸ்திரத்தின்மேலும், அவருடைய தொடையின் மேலும் எழுதப்பட்டிருந்தது" என்று சொல்கிறது. இந்த விவரிப்பு வெளி. 17;14-ல் தன் மீது யுத்தம் செய்ய எதிரிகள் மீது, கிறிஸ்து மேற்கொண்ட போது அவருக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

வெளி. 19;17-18ஆம் பகுதியில், கிறிஸ்து தன்னுடைய விரோதிகள் செய்யும் யுத்தத்தின் முடிவு எப்படியிருக்கும் என்பதை வெளிப்படுத்த ஒரு விருந்து பற்றிச் சொல்லப்படுகிறது. வசனம் 17,18களில், யோவான், ஒரு தூதன் சூரியனில் நிற்கவும், அவன் வானத்தின் மத்தியில் பறக்கிற சகல பறவைகளையும் பார்த்து; தேவன் கொடுக்கும் விருந்துக்குக்கூடி வாருங்கள் என்று மிகுந்த சத்தத்தோட கூப்பிட்டான்" என்றும் சொல்கிறது. இந்த விருந்தில், பறவைகள் என்ன உணவை உண்ணும் என்பதும் சொல்லப்பட்டிருக்கிறது. "ராஜாக்களின் மாம்சத்தையும், சேனைத் தலைவர்களின் மாம்சத்தையும், பலவான்களின் மாம்சத்தையும், குதிரைகளின் மாம்சத்தையும், அவைகளின் மேல் ஏறியிருக்கிறவர்களின் மாம்சத்தையும், சுயாதீனர், அடிமைகள், சிறியோர், பெரியோர், இவர்களெல்லாருடைய மாம்சமும் இதில் அடங்கும்". இது, தேவனை அறியாத, கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாத எந்த ஒரு மனிதனும் கர்த்தருடைய நித்திய நியாயத்தீர்ப்புக்குத் தப்ப முடியாது என்ற உண்மையை நினைவுபடுத்துகிறது. (மத். 25;32, 41-46; ரோமர்.2;8,9, 2. தெச. 1;7-10).

வெளி. 19;19-21 வசனங்கள், யுத்தத்தையும், அதன் முடிவையும் விவரிக்கிறது. வசனம் 19-ல் யோவான், "மிருகமும், பூமியின் ராஜாக்களும் அவர்களுடைய சேனைகளும், குதிரையின் மேல் ஏறியிருக்கிறவரோடும், அவருடைய சேனையோடும் யுத்தம் பண்ணும்படி வரக் கண்டான்" வெளி. 13;1-10 வசனங்களில் அறிமுகப்படுத்தப்பட்டு, தேவனை தூஷித்து, அவருடைய பரிசுத்தவான்களோடு யுத்தம் பண்ணினதும், ஜீவ புத்தகத்தில் பெயரெழுதியிருந்தவர்கள் தவிர, உலகமனைத்தும் வணங்கினதுமான மிருகம் இதுதான். அடுத்த வசனம் இரண்டாம் மிருகம் பற்றியும் அது, மிருகத்தின் முன்பாகச் செய்த அற்புதங்களால் அதின் முத்திரையைத் தரித்தவர்களையும், அதின் சொரூபத்தை வணங்கினவர்களையும் மோசம் போக்கின கள்ளத் தீர்க்கதரிசி (19;20). மேலும் இந்த வசனம், மிருகமும், கள்ளத் தீர்க்கதரிசியுமாகிய இருவரும் "கந்தகம் எரிகிற அக்கினிக்-கடலிலே தள்ளப்பட்டார்கள்" என்று சொல்கிறது அக்கினிக் கடல் என்பது நரகமாகும். (வெளி. 20;10, 14-15, 21;8). இந்த வசனம், துன்மார்க்கத்தனம் மற்றும் சத்தியத்தின்படி தவறு செய்கிறவர்கள், அவர்களின் தலைவர்கள் ஆகிய அனைவரும், தங்களது நித்தியத்தை நரகத்திலே காண்பார்கள் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. (2. பேதுரு. 2;1-3). (இந்த மிருகமும், கள்ளத் தீர்க்கதரிசியும் ரோம சாம்ராஜ்யத்தின் துன்மாக்கத்தைக் குறிப்பாகக் குறிப்பதாக இருந்தாலும் இல்லாவிட்டாலும்) வசனம் 21, துன்மார்க்-கத்தையும், தவறான உபதேசத்தையும் பினபற்றுகிற அனைவரும், ஒருவேளை அவர்களை யார் வழிநடத்தினாலும், அவர்களும் தேவனுடைய நித்திய ஆக்கினையிலே பங்கடைவார்கள் என்பதைத் தெளிவுபடுத்துகிறது (2. பேதுரு. 2;18-22; வெளி. 14;9-11) வசனம் 21, "மற்ற-வர்கள் குதிரையின் மேல் ஏறினவர்களுடைய வாயிலிருந்து புறப்படுகிற பட்டயத்தால் கொல்லப்பட்டார்கள்; அவர்களுடைய மாம்சத்தினால், பறவைகள் யாவும் திருப்தியடைந்தன" என்ற கூறுகிறது. கிறிஸ்துவுக்கு எதிராக யுத்தம் செய்கிற அனைவரும் தோற்றுப்போகிறார்கள். கிறிஸ்து-வின் பட்சத்தில் இராதவன் அவருக்கு விரோதியாயிருக்கிறான் என்பதை நினைவில் கொள்ள வேண்டும் (மத். 12;30; லூக்.11;23).

வெளிப்படுத்தல் 19-ம் அதிகாரம், கிறிஸ்துவுக்கு உண்மையுள்ள போர்ச்-சேவகர்களாக, அவருடன் இல்லாத அனைவரும், அவர் திரும்ப வரும்போது, அவருடைய கோபாக்கினையைச் சந்தித்து, நித்தியத்தை நரகத்திலே கழிக்க வேண்டுமென்பதை வலியுறுத்துகிறது.

**EZSR** **JON MACON**

# நம்பிக்கை

நமக்கும், நம் மனச்சாட்சிக்கும் உள்ள உறவு; நம் மனச்சாட்சிக்கும் நம் செயலுக்கும் உள்ள உறவு; இவை நமது குணநலன்களை, காரெக்டரை நிர்ணயிக்கிறது. பவுல் இதைக் குறித்து ரோமருக்கு எழுதின நிருபத்திலே, (ரோ-7 : 18ல்) நன்மை தீமை இரண்டுமே நம்மிடத்திலிருக்கிறது. அதெப்படியெனில், என்னிடத்தில் அதாவது என் மாம்சத்தில் நன்மை வசாமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன். நன்மை செய்ய வேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது. நன்மை செய்வதோ என்னிடத்திலில்லை. ஆகவே, இந்த இரண்டில் ஒருவர் எதைச் செய்கிறாரோ அதை வைத்து அவருடைய காரெக்டரை தெரிந்துக் கொள்ளலாம்.

நம்மால் முடியும் என்ற எண்ணம் மனதில் தோன்றும் போது, செய்து முடிக்கும் தார்மீக வலிமை உடலில் பிறக்கிறது. அப்பொழுது திரும்பதிரும்ப பிறக்கும் இந்த எண்ணம் நம்பிக்கை ஆகிறது. நம்பிக்கை நம்மை செயல்படத் தூண்டுகிறது. இப்பேர்ப்பட்ட ஒரு நம்பிக்கை கிறிஸ்தவனுக்குள் எழும்பொழுது நமக்குள் வாசம் செய்து கொண்டடிருக்கின்ற ஆவியானவர் அந்த நம்பிக்கையை கிரியை மூலமாக நடப்பிக்கிறார் (ரோ : 8 : 26-27). திரும்பத் திரும்பச் செய்யப்படும் செயல் பழக்கமாய் மாறுகிறது. பழக்கங்கள் மனிதனின் குணநலன்களாய் மாறுகின்றன. அவனது எண்ணம் நம்பிக்கையாய், நம்பிக்கை செயலாய், செயல் பழக்கமாய், பழக்கம் குணநலன்களாக அமைகிறது. இங்கே நாம் கவனிக்க வேண்டிய மிக முக்கிய விஷயம், எப்படி எண்ணங்கள் நமது நம்பிக்கையாக மாறுகிறது என்பது தான்.

ஒரு வீடு கட்ட வேண்டும், ஒரு பெரிய தொழிலை உருவாக்க வேண்டும், ஒரு தலைவனாக வேண்டும் என்ற எண்ணம், ஒரு சாதாரண எண்ணமாக மனத்துள் தோன்றுகிறது. ‘நம்மிடம் என்ன இருக்கிறது? வீடு கட்ட பணம் வேண்டாமா? மனை வேண்டாமா? போதுமான வருமானம் வேண்டாமா? என்று மனம் வரிசையாக எண்ணங்களை அடுக்கிறது. நடுவில் முடியுமா? என்ற ஒரு சந்தேகத்தையும் கிளப்புகிறது. நம்மிடம் எவ்வளவு சேமிப்பு இருக்கிறது, வங்கியில் இவ்வளவு கடனாக வாங்கலாம். மாதா மாதம் இவ்வளவு என்று கட்டிவிடலாம்’ என்று இழையோடு இழையாக மற்றோர் எண்ணத்தொடர் ஓடுகிறது. “ஏதோ முடியும் போலிருக்கிறதே! முயன்றால் முடியலாம் போலிருக்கிறதே!” என்ற தெம்பைக் கொடுக்கும் உற்சாகத்தை ஊட்டிவிடும் ஓர் எண்ணத்தொடர் ஊடே ஓடுகிறது. மலை உச்சியில் வீடு கட்டிக்கொள்பவர்கள், சுலபமாக ஏறி இறங்க எப்படி வழி கண்டுபிடிப்பார்களாம் தெரியுமா?

# ஏழுவித ஞானஸ்நானம்

1. யோவான் ஸ்நானன் கொடுத்த ஞானஸ்நானம்.
   John's Baptism in water. மத். 3:1–6, மாற்கு 1:4,5
2. கிறிஸ்தவ ஞானஸ்நானம்.
   Christian Baptism in water. மத் 28;19; மாற்கு 16;16; அப். 2;38–41;
3. பாடுகளின் ஞானஸ்நானம்.
   Baptism in Suffering. லூக்கா. 12:50
4. மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம்.
   Baptism in the Cloud and in the Sea. I கொரி 10:2
5. பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம்
   Baptism in the Holy Spirit மத் 3:11; மாற்கு 1:8
6. அக்கினி ஞானஸ்நானம்
   Baptism of fire மத் 3:11, 13:40–43
7. நோவாவின் ஞானஸ்நானம்
   Noah's Baptism 1 பேதுரு 3:15–21

தங்கள் மாட்டை மேய்வதற்காக அவிழ்த்துவிட்டுவிடுவார்களாம். மாடு அப்படி, இப்படி என்று கவனித்து ஏறி இறங்கி மலையிலிருந்து எளிதாக கீழிறங்கி ஒரு நல்ல வழியைக் கண்டுபிடித்து தினமும் கீழேபோய் புல்மேய்ந்துவிட்டு வருமாம். மனமும் அப்படித்தான். அதாவது மனதுக்கு ஒரு கடைசி லட்சியத்தை ஆசையைக் காட்டிவிட்டோமானால், அதை எப்போதும் அங்கே நிலை நிறுத்தினால் போதும் – அது எப்படி அடைவதென்ற வழியைத் தானே கண்டுபிடித்துக் கொடுக்கும் என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். மனம் தன்னைத்தானே உந்தித் தள்ளி தவறான பாதையில் இடிபட்டுத் திரும்பி சரியான பாதைக்கு மீண்டும் மீண்டும் வரும் ஒரு இயந்திரம்" என்கிறார் மேக்ஸ்வேல் மால்ட்ஸ்.

எண்ணம் நம்பிக்கை பெறாத போது எதுவும் நடப்பதில்லை. அப்போது எண்ணம் வெறும் சோம்பேரியின் ஆசையாய், ஊமையின் கனவாய், பாலைவனத்தில் விழுந்த மழைத்துளியாய்ப் போய்விடுகிறது. வீணான மனுஷனே, கிரியைகளில்லா விசுவாசம் செத்ததென்று நீ அறிய வேண்டுமோ? (யாக்-2:20) என்று யாக்கோபு ஆசிரியர் கூறுகிறார். மனத்தில் நம்பிக்கை என்ற பசை, எண்ணத்துக்கு ஈரம் கொடுத்து உயிர் கொடுக்கிறது. மனம் நடப்பதை நம்புகிறது. மனம் நம்பும் போது உடலின் எல்லா உறுப்புகளையும், தன்

நம்பிக்கைக்கேற்ப மனம் இயங்கச் செய்கிறது. நம்பிக்கையின் வலிமையைக் கவனியுங்கள்.

சில ஆண்டுகளுக்கு முன் நோயுற்ற ஓர் இளம் தாயை தொலைக் காட்சியில் காட்டினார்கள். அந்த இளம்பெண்ணுக்கு மூன்று குழந்தைகள். மறுத்தவர்களோ இன்னும் ஆறு மாதம் தான் என்று கெடு வைத்திருந்தார்கள். அவளோ என்னுடைய குழந்தைகளை நல்லவிதமாக வளர்க்கும் ஒரு நல்ல குடும்பத்தைக் கண்டுபிடித்து இந்தக் குழந்தைகளை ஒப்படைக்கும் வரை நான் எப்படி சாகமுடியும்? என்றாள். அந்தப் பெண்மணி மூன்றாண்டுகள் வரை உயிரோடிருந்தாள். நல்ல குடும்பத்தில் தன் குழந்தைகளை ஒப்படைத்தப் பிறகு தான் இறந்து போனாள்! அவளது நம்பிக்கையின் வலிமையைக் கவனியுங்கள்.

எசேக்கியா அரசனின் ஆற்றல் மிகுந்த தலைமைதுவத்தின் கீழ் யூதா தேசம் ஆவிக்குரிய எழுப்புதலை அனுபவித்து வந்தது. விக்கிரகங்கள் நொறுக்கப்பட்டன. ஆலயம் சீரமைக்கப்பட்டது. மக்கள் மறுபடியுமாகக் கர்த்தரை ஆராத்தித்தார்கள்.(2நா 29:) எசேக்கியா "தன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நன்மையும், செம்மையும், உண்மையானதைச் செய்தான். (2நா 31 : 20) ஆனால் அவன் கீழ்படிதலோடு இருந்த அந்த வேளையில் திடீரென்று ஆசீரியாவின் கொடூரமான அரசனான சனகெரிப்பால்

## கூடாதது...

1. விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாடயருக்கக் கூடாது. எபி. 11:6
2. மறுபடியும் பிறவாமல் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க கூடாது. யோவான் 3:3,5
3. உலகம் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளக் கூடாது. யோவான் 4:17
4. கிறிஸ்துவில் நிலைத்திராவிட்டால் கனிகொடுக்கக் கூடாது. யோவான் 15:4,5
5. இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்யக்கூடாது. மத் 6:24
6. தேவனுடைய பார்வைக்கு மறைந்திருக்கக் கூடாது. எபி. 4:13;

## ஞானம் சத்தமிடுகிற ஏழு இடங்கள்

*நீதிமொழிகளில்...*

1. வெளியே (in open places). 1:20
2. வீதிகளில் (in streets). 1:20
3. சந்தடியுள்ள தெருக்களின் சந்தியில் (in the chief place of con course). 1:21; 8:3
4. ஒலிமுக வாசலில் நின்று (in the opening of the gates). 1:21; 8:3
5. பட்டணத்தின் முகப்பில் (at the entry of the city). 8:3
6. வழியருகேயுள்ள மேடைகளில் (the top of high places). 8:2
7. நடைகூடங்களில் (at the coming in at the doors). 8:3

முற்றுகையிடப்பட்டான். (2நா 32 : 1) சம்பவங்கள் இவ்வாறு ஊக்கமிழக்கச் செய்யும் வகையில் மாறிவிட்டதைக் கண்டு எசேக்கியா கோபம் கொண்டிருக்க முடியும். மாறாக அவன் தொடர்ந்து தேவன் மேல் நம்பிக்கை வைத்தான். மக்களைக் கூட்டிச் சேர்த்து "நமக்கு துணை நின்று நமக்கு யுத்தங்களை நடத்த நம்மோடிருக்கிறவர் நம்முடைய தேவனாகிய கர்த்தர் (32:8) என்று கூறுனான்.

எத்தனை விசுவாசிகள் ஊழியர்கள் இந்த எசேக்கியாவைப் போல பாடுகள், சோதனைகள் எதிர்ப்புகள் மத்தியிலே நம்பிக்கையுள்ளவர்களாய் வாழ்ந்துக்கொண்டு ஊழியம் செய்துகொண்டு இருக்கிறோம். விரல்விட்டு எண்ணிவிடலாம். அநேகருடைய நம்பிக்கை மனிதர்கள் மீது இருக்கிறது. ஆகவே தான் எங்குப் பார்த்தாலும் பிரச்சனைகள், இடறல்கள் செய்துக் கொண்டு இருக்கிறார்கள் (எரே 17:7) அப்பேர்ப்பட்ட மக்களைப் பார்த்து எரேமியா சொல்லுகிறார். "கர்த்தர்மேல் நம்பிக்கை வைத்து கர்த்தரை தன் நம்பிக்கையாக கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவனோடிருக்கிறது மாம்சபுயம். நம்மோடிருப்பது நம் தேவனாகிய கர்த்தர் என்று" எசேக்கியா சனகெரிப்பைக் குறித்துச் சொன்னது போல, யோவான் ஆசிரியர் சொல்லுகிறார். பிள்ளைகளே நீங்கள் தேவனால் உண்டாயிருந்து அவர்களை ஜெயித்தீர்கள், ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர். (1யோ 4:4). அப்பேர்ப்பட்ட வல்லமை பொருந்தியவர் நம் பட்சத்தில் இருக்கும் பொழுது நமக்கு விரோதியாய் இருப்பவன் யார்? என்று கேட்கிறார் அப்போஸ்தலன் பவுல். நாம் தேவனிடத்தில் இயேசுவின் மூலமாய் கேட்கும்பொழுது முழு நம்பிக்கையோடு போதும் என்கிற மனதுடனே கேட்க வேண்டும். அப்பொழுது நாம் கேட்டதைப் பெற்றுக்கொள்ள முடியும்.

நாம் ஜெபத்திலே எவைகளை கேட்கிறோமோ அவைகளை பெற்றக்கொள்வோம் என்ற நம்பிக்கையோடு காத்திருக்க வேண்டும். மெய்யாகவே உண்மையுள்ளவராக இருப்பதற்கு எசேக்கியா மாதிரியாக இருந்தார். துன்பம் இல்லாத வாழ்க்கையைத் தர வேண்டும் என்ற உறுதிப்பாட்டை வேண்டாமல் அவர் கர்த்தருக்கு கீழ்படிவதில் தீர்மானமாக இருந்தார். அவரைப்போல் நாமும் இருண்ட வேளைகளில் கூட தேவன் மீது நம்பிக்கை வைத்து அவருடைய பிரசன்னம் மற்றும் வல்லமையைக் குறித்து நிச்சயத்துடன் இருக்க முடியும். இந்த நிச்சயமான நம்பிக்கையை குறித்து எபிரேய ஆசிரியர் என்ன கூறுகிறார் என்று கேட்போம். (எபி 10:23) "அல்லாமலும் நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுவதில் அசைவில்லாமல் உறுதியாய் இருக்கக் கடவோம்". ஆகவே, நாம் கர்த்தருக்குள் மரித்து கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் நியாயந்தீர்க்கப்பட்டு அவருடன் இருப்போம் என்று அவரைப் பின்பற்றும் விசுவாசத்தில் அவருக்குள் (கிறிஸ்துவுகுள்) நமக்கு தைரியமும் திட நம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியமும் உண்டாயிருக்கிறது. (எபே. 3:12)

ஆகவே, வரப்போகிற ஒரு புதிய ஆண்டை நம்பிக்கையோடே எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற நாம் நித்தியமான சந்தோஷ வாழ்க்கை பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள் (ரோ 12:12) என்று பவுல் நம்பிக்கை யூட்டுகிறார். அந்த நம்பிக்கையை உறுதியாய் பற்றிக் கொண்டு சந்தோஷமாயிருப்போம்.

**யோசுவாசெல்வம்**






# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45 - 9.00 p.m.<br>9.00 - 9.15 p.m. | Box 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Sun, Mon<br>Tue, Thu | 2.00 - 2.15 p.m. | Box 80<br>Kakinada - 533001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box 8405<br>Bangalore - 560084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum - 695 034 | P.K. Varghese |



***Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures***

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2002
Licensed to Post without Prepayment
TN / WR / ERD / 03 / WPP / 2002

Registered News Paper
RNI No. 47661 / 87 - New Delhi

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக்
கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட,
அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள்
விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.
இது 15 பாடங்களைக் கொண்ட

*ஓர் இலவசப் பயிற்சி,*

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு
சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்
*அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,*
த.பெ.எண்–27, காங்கேயம் – 638 701.
தமிழ்நாடு. இந்தியா

Published by **Church of Christ, Kangayam,**
Printed at Konar Printers, Madurai - 625 012. Editor : **S. Rajanayagam.**